# தென்மொழி

## நாங்கள் புலிகள்!

(எடுப்பு)

நாங்கள் புலிகள்!
நாட்டைக் காப்போம்!
ஓங்கிய தமிழர்
உரிமைகள் மீட்போம்!

(தொடுப்பு)

தூங்குதல் இல்லோம்; துயர்களைப் பாரோம்!
ஏங்குதல் கொள்ளோம்; இன்பம் விரும்போம்! (நாங்கள்)

சூளுரை ஏற்றோம்; சோம்புதல் இல்லோம்!
தோளுரம் கொண்டோம்; துணிவொடு நிற்போம்!
(நாங்கள்)

அச்சமும், கொள்ளோம் அயர்வுகள் இல்லோம்!
எச்சமும் இன்றி, எப்கடன் செய்வோம்! (நாங்கள்)

எழுச்சியும் செயலும் எங்கள் கொள்கை!
முழுச்சிதைவுறினும் முனைப்பில் தளரோம்! (நாங்கள்)

இளைஞர்கள் வருவீர்! எம்முடன் சேர்வீர்!
இளைஞைகள் எழுவீர்; எம்மொடு நடப்பீர்! (நாங்கள்)

தமிழ்மொழி வளர்ப்போம்! தாழ்ச்சிகள் தகர்ப்போம்!
தமிழ்நிலம் அமைப்போம்! தளர்வுற மாட்டோம்!
(நாங்கள்)

உலகத் தமிழர் ஒன்றாய் இணைவோம்!
விலகுதல் இன்றி, வெற்றிகள் கொள்வோம்! (நாங்கள்)





சுவடி 16
ஓலை: 12

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
ஓர் உருபா

# நமக்கு வந்த மடல்கள்.

0.790: பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். தென்மொழி விடை யிதழில் நண்பர் இரணியனின் மடல் தொடர்பாகச் சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

முதற்கண் புகழ்ச்சி மடல்கள் வெளியீடு. அவை பெருஞ்சித்திரனார் தம் மனத்தை நிறைவு செய்து கொள்ளவா? அல்லது பிறர் தம்மை உயர்வாக என்ன வேண்டுமென்பதற்கா? அன்று, அன்று. தொடக்கத்தில் உள்ளங்கள் எப்படி அறிவைக் கண்டு மயங்குகின்றன. பிறகு வினையின் கடுமையால் எப்படித் திரிகின்றன என்னும் உண்மைகளைத், தென்மொழி அன்பர்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். சிலர் 'புகழ்ச்சியென்பது வாய்ச் சொல் உரையே' என்பதை மெய்ப்பிப்பர். தென்மொழி ஆய்வுக் கூடத்தில் கிட்டும் ஒவ்வொர் இயக்க நுட்பத்தையும் அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதே அம்மடல்களை வெளியிடுவதால் எதிர்பார்க்கும் பயன் இவர் போன்ற ஆட்கள் தொண்டர்கள் தம் சூழலிலும் எதிர்ப்படுவரன்றோ? எனவே புகழ்ச்சி மடல் வெளியீடு அவரின் மன மெலிவைக் காட்டுவதற்கு மாறாக தமிழ்த் தொண்டர் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மைகளை (புகழ்ச்சி, கண்டனம்) துணிந்து வெளியிடும் அவர்தம் கடமை உணர்வையே காட்டுகின்றது. 'பாராட்டு, பழிப்பெல்லாம் பயன் கொள்வார் கருத்தாம்!'

அடுத்து, பெருஞ்சித்திரனார்க்கு ஆட்களை இனங் காணுமாற்றல் இல்லாமலில்லை. நமக்கு இனங் காணு மாற்றலை அம் மடல்கள் வளர்க்கின்றன. 'வீர ஊழி, கீர ஊழி' யெல்லாம் அவர்தம் கற்பனையே! ஏதோ பக்கங்களை நிரப்ப வேண்டுமென்று தென்மொழியில் செய்திகள் வெளியிடுவதில்லை. எந்தப் பக்கம் பயனற்றது என்று சுட்டிச் சொல்ல வேண்டும். சும்மா பொத்தாம் பொத்தியாக பரும்படியாகச் சொல்வதால் என்ன பயன்?

அடுத்து, பாவலரேறுவின் பகைவர்கள் யார்? அவரைப் பகைப்பவர் உண்டு. ஆனால் அவர் யாரையும் பகைப்பதில்லை! சில வாழ்வியல் (உலகியல்) துய்ப்புகளை நாடி ஒதுங்கிக் கொள்வோரை எப்படிப் பயன்படுத்துவது? குதிரையைக் குளத்திற்கு இட்டுச் செல்லலாம். ஆனால் அதுதானே குடிக்கவேண்டும்? தென்மொழியில் முதலில் தொடர்பிருந்தவர் பகைவர்களல்லர். அவர்கள் தொண்டின் சுமை தாங்கமாட்டாது ஒதுங்கி நின்றவர். நீங்களே கூறியது போல் சாதி ஏணியில் ஏறியோர் சிலர். கட்சி வயலில் பயிராய் விளங்க எண்ணுவர் தென்மொழி வயலில் எருவாய் ஆக ஒருப்படுவரோ?

தென்மொழி நடுநிலையாக யார் கட்டுரையையும் 'தமிழர்க்குப் பயன்படுமா?' என்ற ஒரே அளவுகோல் கொண்டு அளந்து வெளி

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

கெஞ்சுவதில்லை பிறர்பால்;
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!



# தென்மொழி
இலக்கிய இதழ்

சுவடி: 16 ஓலை: 12.
[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]
கடகம். தி. பி. உ௰கக-
சூலை-ஆக 1980.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
அமைச்சர்: அழ. இளமுருகன். அறி. இ.
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன]

### " அரசியலை விட்டு விலகித் தமிழக விடுதலைக்குப் பாடுபடுங்கள் "

## கலைஞர்க்கு நேரடி வேண்டுகோள்!



பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய கலைஞர் அருட்செல்வர் (கருணாநிதி) அவர்களுக்கு,

உங்கள் அரசியல் திறனில் நம்பிக்கையும், தமிழ், தமிழர் முன்னேற்றத்தின் மேல் நீங்கள் வைத்த அக்கறையில் உறுதியும் கொண்ட அன்புள்ளம் எழுதிக்கொள்ளும், காலங்கருதி இடத்தால் விடுக்கும் நேரடி வேண்டுகோள்.

கலைஞர் அவர்களே! கடந்த தேர்தலில் நீங்கள் விரும்பியோ விரும்பாமலோ, அல்லது மக்களெல்லாம் எதிர்பார்த்தோ எதிர் பாராமலோ நேர்ந்த அரசியல் வீழ்ச்சி, உண்மையிலேயே தமிழர்தம் இன முன்னேற்றத்தில் ஏற்பட்ட சரிவே ஆகும் என்பதை நாங்கள் மனமார உணர்கின்றோம். அவ் வீழ்ச்சியின் அடிப்படையில், இனி நாம் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்பாடுகளை, நம் மன அடைப்புகளை யெல்லாம் விட்டு விட்டுக் கூர்மையான—வெளிப்படையான முறையில் சிந்தித்துப் பார்க்காமல், நாம் அடைந்த தோல்விக்கான கரணியங்களைப் பற்றி ஆராய்வதும், பேசுவதும், அயர்வுவர

எழுதிக் கொண்டிருப்பதும், மேலும் நம்மை நாமே சிதைத்துக்கொள் கின்ற செயல்களாகும் என்பதை உங்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

தந்தை பெரியார் அவர்களிடம் நீங்கள் கற்றுக்கொண்ட இன எழுச்சிப் பாடமும், அறிஞர் அண்ணு அவர்கள் உங்களுக்குக்கற்றுத் தந்த அரசியல் அறிவுறுத்தங்களும் இன்னும் உங்கள் குருதி நாளங் களில் இடையருது ஓடிக்கொண்டிருக்கும் என்று நம்புகின்ருேம். ஆனல் கடந்தகால இடைவெளியில் நீங்கள் உங்களையே திரை யிட்டுக் கொண்டு, உங்கள் மனச்சான்றுக்கு மாருன அரசியல் நட வடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டு வந்தீர்கள். அவற்றிலெல்லாம் உங்களுக்குரிய திறப்பாடுகள் வெளிக்குக்கொண்டு வரப்பெறவில்லை என்றே நாங்கள் கருதுகின்ருேம். மாருக, அப்பொழுதெல்லாம் வீசிய அரசியல் சூருவளிகளில் சிக்கிக் கொண்டு, திக்கித் திணறிப் போனீர்கள். அவற்றிலிருந்தெல்லாம் இன்றுவரை உங்களை நீங் களே மீட்டுக்கொண்டு வெளியே வர முடியவில்லை. அந்நிலையில் இறுதியாக உங்கள் அழியாத கொள்கையுணர்வுகளையும் புறத்தே வைத்து விட்டு, உங்கள் போக்குக்கு, உள்ளுணர்வுகளுக்கு மாரு கவே, வேறு வேறு திரிபுணர்வு கொண்டவர்களிடமெல்லாம் உங் களை நீங்கள் விரும்பாமலேயே இணைத்துக் கொண்டீர்கள். ஆனல் அந்நிலைகளில் எல்லாம் நீங்கள் தோல்வியே கண்டீர்கள். அத் தோல்வியின் வடுக்களைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல், இன்னும் அரசியல் பட்டம் பதவிகளிலும் நாற்காலிகளிலுமே உங்கள் மனம் கிடந்து உழன்று கொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

தமிழின முன்னேற்றத்தைப் பற்றியே எந்நாளும் எண்ணிக் கொண்டிருக்கும் திறமுடையவரே!

தங்களைச் சுற்றியிருக்கும் அன்பர்களைச் சற்றே விலக்கி விட்டுத், தங்களைச் சூழ்ந்து கொண்டிருக்கும் அரசியல் பூசல்களை ஒருவாறு ஒதுக்கி வைத்துவிட்டு நாங்கள் கூறுகிற அன்புரைக்குச் சிறிதே செவிசாய்க்கும்படி, காலத்தின் கட்டாய அழுத்தத்தில் உங்களை வேண்டிக் கொள்கிருேம்.

உங்களை — உங்கள் அறிவாற்றலை — உங்கள் இனவுணர்வை — உங்கள் தமிழார்வத்தை — மூடி மறைத்திருக்கும் அந்த அரசியல் மாயையை — பதவிப் புதைசேற்றை உதறி யெறிந்து விட்டு, உடனே உங்களை விடுவித்துக் கொண்டு வெளியே வாருங்கள். உங்களுக் கென்று ஒரு பெரிய விடிவு காத்திருக்கின்றது. உங்களுக்கென்று தமிழர் வரலாற்றில் ஒரு முன்னேற்ற ஊழி தன் கதவுகளைத் திறந்து வைத்திருக்கின்றது. அதன் தொடக்கம் உங்கள் முடிவாக இருக் கட்டும். அதற்காக நீங்கள் செய்யப் போகும் பெரும்பணி தமிழரின் இன முன்னேற்ற வரலாற்றுப் பொத்தகத்தில் அகன்ற பொன்னேடு களை உங்களுக்கு அமைத்துக் கொடுக்கட்டும்.

ஒரு பெரும் போராட்டம் இன்றி—பெரிய புரட்சியின்றி—காலச் சகதியில் உள்ளழுந்திக் கிடக்கும் இத் தமிழினம் முன்னேற முடியாது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் படுகுழியில் தள்ளப் பெற்றிருக்கும் இத் தமிழினத்திற்கு விடிவு காணும் வல்லமை, அரசியல் அங்கைப்புகள், பொருள் நசைகள், பதவிப் படுகுழிகள், விளம்பரத் தவிப்புகள் போன்றவற்றிலிருந்தெல்லாம் தம்மை மீட்டுக் கொள்ளும் ஒருவரிடந்தான் இருக்க முடியும். அத்தகைய ஒருவராய் இனி உங்களை நீங்களே ஈடேற்றிக் கொள்ளுங்கள். அத்தகுதியெல்லாம் உங்களிடம் உண்டு. கடந்தகால அரசியல் பாடங்களும் இதனை உங்களுக்கு நன்கு உணர்த்தியிருக்கின்றன.

தமிழின வரலாற்று வீழ்ச்சியை நீங்கள் உணராதவரல்லர். தமிழின மேம்பாட்டுக்காகவே நெட்டுயிர்க்கும் உங்கள் உணர்வு இன்னும் சாம்பி விடவும் இல்லை. நீங்கள் செய்ய வேண்டுவதெல்லாம், உங்களைச் சுற்றியிருக்கும் அரசியல் கட்டுகளினின்றும் பதவித் தளைகளினின்றும் உங்களை வேரறுத்துக் கொண்டு **'தமிழ்நாடு தமிழர்க்கே'** என்று குரல் கொடுப்பதுதான். இந்த ஒலி முழக்கம் உங்களுக்குப் புதியதன்று. நீங்கள் புறந்தள்ளியதுமன்று. ஏதோ ஒரு சட்ட உந்தலால், காலத்தின் அழுத்தத்தால், விலக்கி வைக்கப் பெற்ற, அன்றைய வாயொலி இன்றும் உங்கள் மன ஒலியாக—அடிமனத்தின் துடிப்பாக இருக்கவே இருக்கும்; இருக்கத்தான் செய்யும். அதை முழுவதும் மூடி மறைத்துவிட உங்களால் முடியாது. பெரியாரும் அண்ணாவும் கண்டு கொண்டிருந்த கனவும் அதுதான். இன்றைய நிலையில் உலகம் வாழ் தமிழரெல்லாரும் ஒரேயொரு தலைவராக உங்களை மதிக்கவும் போற்றவும் வைக்கும் தலையாய முழக்கமும் இதுதான். மற்றபடி, உங்களுக்கு இனி என்ன தேவையிருக்கின்றது? உங்களுக்கென்று எதனை நாடப் போகிறீர்கள்? நீங்கள் அமர்ந்த நாற்காலியின் சூட்டில் யார் வேண்டுமானாலும் வந்து குளிர்காய்ந்து கொள்ளட்டும். அவர்களைப் பற்றியெல்லாம் நீங்கள் கவலைப்படாதீர்கள்; கருத்தழியாதீர்கள். நீண்ட நெடும் வரலாறு உங்களுக்காகக் காத்துக் கிடக்கின்றது. இன்றைய நிலையில் உலகத் தமிழர் விடிவுக்கென எழுச்சிக் குரல் கொடுக்கும் இன்னொரு தலைவரை நாங்கள் காண முடியவில்லை.

எனவே, அன்புக் கலைஞரே, அருமைத் தலைவரே, **நீங்கள் அரசியலை விட்டு உடனடியாக விலகுங்கள். உலகத் தமிழின விடிவுக்கென ஒரு விடுதலை வரலாற்றைத் தொடங்கி வையுங்கள்.** உங்களுடன் ஒத்துழைக்க ஒரு கோடித் தமிழர் முன்வருவர். உங்கள் தோளுக்குத் தோளாக, கைக்குக் கையாக, தொண்டுக்குத் துணையாக, அடிநிலைத் தொண்டர்களாக, விடுதலை முழக்கமிட நாங்கள் காத்திருக்கின்றோம். நீங்கள் அரசியலில் ஈடுபட்டுச் செய்யவிருக்

(7-ஆம் பக்கம் பார்க்க)

# செய்திகள்

**1. தொலைக்காட்சி—நிகழ்ச்சிகளில் பெருஞ்சித்திரனார் :**

1) கடந்த 19-6-80 அன்று இரவு 8-15 மணிக்குச் சென்னைத் தொலைக்காட்சியில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் 'வண்ணக் களஞ்சியம்' என்னும் ஒரு நிகழ்ச்சியில் 10 நிமைய நேரம் கலந்து கொண்டார்கள். திரு. **ஔவை நடராசன்** (நெறியாளர், தமிழக அரசு, மொழிபெயர்ப்புத்துறை) அவர்கள் 'தமிழால் ஆகுமா அறிவியல் நூல்கள்' என்னும் கருத்துப் பற்றி வினாக்களை எழுப்ப, பொறுப்பாசிரியர் அவர்கள் அவற்றுக்குத் தக்கபடி விடைகளைக் கூறி, தமிழ் அறிவியல் கூறுகள் நிரம்பிய ஒரு மொழியென்றும், ஆனால் கடந்த காலத்தில் அம் மொழியும் அது பேசும் இனமும் பலவகை முன்னேற்றத்திற்கும் வாய்ப்பில்லாமல் அழுத்தி வைக்கப் பெற்றிருந்ததால் அறிவியல் வளர்ச்சி பெற இயலாமற் போயிற்றென்றும் கூறித் தமிழ் ஓர் அறிவியல் மொழி என்பதை நிலைநாட்டினார்கள். தொலைக்காட்சியில் இந்நிகழ்ச்சியைப் பார்த்தும் கேட்டும் மகிழ்ந்த அன்பர்களும் அறிஞர்களும் சிலர் நேரில் வந்து ஆசிரியர் தந்த விளக்கங்களைப் பெரிதும் பாராட்டி யுரைத்தனர்.

2) தூய தமிழ்மேல் மக்கள் காட்டிய ஆர்வம் காரணியமாகத் தொலைக்காட்சி நிலையத்தார் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களைக் கொண்டு மீண்டும், சென்ற 17-7-80-ஆம் பக்கல் இரவு, அதே வண்ணக்களஞ்சிய நிகழ்ச்சியில், 20 நிமையங்கள் கலந்து கொண்டு, 'தமிழும் திரவிட மொழிகளும்' என்னும் தலைப்பில் பேச அழைத்தார்கள். அந்த நிகழ்ச்சியில் திருவாட்டி **சேதுராணி**, க.மு. அவர்கள் கேட்ட வினாக்களுக்கு மிகவும் விரிவான முறையில் தக்க விடையளித்தார்கள், நிகழ்ச்சியில் ஆசிரியர் ஒரு வினாவுக்கு விடையளிக்கையில், 'தமிழ்மேல் அக்கறை யின்றியும் சோம்பல், அறியாமை காரணியமாகவும் அதைத் திரித்தும், சிதைத்தும், கொச்சையாகவும் பிறமொழி கலந்தும் பேசியதால்தான் அது தெலுங்காகவும் கன்னடமாகவும், மலையாளமாகவும், துளுவாகவும் இன்னும் பல்வேறு திரவிட மொழிகளாகவும் சிதைந்து உருமாறிப் போனதென்றும், அதனால் ஒரு காலத்து இந்தியா முழுவதும் பரந்து வழங்கப் பெற்று வந்த தமிழ் மொழி, இன்று நிலத்தையும் மக்கள் தொகையையும் இழந்து மிகக் குறுகி, ஒரு சிறு நிலப் பரப்பில் வழங்கி வருகின்றதென்றும் கூறி, அஃது எவ்வெவ்வாறு சிதைவுற்றுத் திரிந்தது என்பதைச் சான்றுகளுடன் விளக்கினார். அத்துடன், இந்தியா ருஓ காலத்தால் பாண்டியர்களால் ஆளப்பெற்றதென்றும் பாண்டியர்களுக்குப் பரதவர், மீனவர் என்ற பெயர்களுண்டு என்றும், அம்

பரதவர் ஆண்டதாலேயே இந்தியாவிற்குப் **பரதகண்டம்** என்று பெயர் வந்ததென்றும், மற்றபடி, பாரதக் கதையில் வரும் துசியந்தன் மனைவி சகுந்தலைக்குப் பிறந்த பரதன் ஆண்டதால் அப்பெயர் வந்ததென்று கூறப் பெற்று வருவது தவறு என்றும்அழுத்தமாக எடுத்துக் கூறினார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் இதனைக் கவனித்திருந்தவர்கள் பலரும், இந்நிகழ்ச்சியைப் பெரிதும் வரவேற்றும் பாராட்டியும், வியப்புற்றும் ஏராளமான மடல்கள் எழுதியும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெருஞ்சித்திரனார் அவர்களின் நிகழ்ச்சியைத் தொடர்ந்து தமிழாராய்ச்சி அறிஞர் **கே. ஏ. சி. ஞானகிரி** அவர்கள் நிகழ்ச்சி ஒன்றிருந்தது. அதில் அவர்கள் தமிழ், இலத்தீன், கிரேக்கம், சாக்சானியம் போன்ற மொழிகளுக்கும் எவ்வாறு மூலச் சொற்களை வழங்கி அவற்றை வளப்படுத்தியது என்பதைச் சான்றுகளுடன் விளக்கினார். இந்த நிகழ்ச்சியையும் மிகவும் பாராட்டி அன்பர் பலர் மடல்கள் வழியும் தொலைபேசி வழியும் தெரிவித்தார்கள என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிற செய்திகள்

**1) செனகால்—தமிழ் வகுப்பு நிறைவு விழா :** தென்னாப்பிரிக்கா—செனகல் நாட்டுத் தலைநகரான, தக்கார் நகரில், ஞாயிறுதோறும் பர். **க. ப. அறவாணன்**, பர். **தாயம்மாள் அறவாணன்** அவர்களால் நடத்தப் பெற்று வந்த தமிழ் வகுப்பின் நிறைவு விழா 1-6-80-இல் சிறப்புற நடைபெற்றது. வகுப்புக்கு வந்த தேர்ச்சி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. விழா நிகழ்ச்சித் தலைவர் திரு. **கிளேபர்.** கருத்துரை வழங்கியவர் திரு. இலசாந்தே; நிறைவுரை திரு. க. ப. அறவாணன். மற்றும் திருவாட்டி கசுத்தூரி மாரிமுத்து, திருவாட்டி இலசாந்தே, திருவாட்டி வசந்தா சுப்பிரமணியம், திருவாட்டி தாயம்மாள் அறவாணன், திரு. மாரிமுத்து, திருவாட்டி கிளேபேர், திரு. மு. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**2. தக்கார், செனகால்—தமிழர் பண்பாட்டுக் கழகம் :** பிரான்சு, செனகால் முதலான பிரஞ்சு மொழி பேசப் பெறும் நாடுகளில் வாழும் பிரஞ்சுத் தமிழரைப் பண்பாட்டு அடிப்படையில் ஒன்று திரட்டும் முகமாகவும், தமிழர் தம் மரபு, கலை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைத் தமிழரிடையே நிலைநிறுத்தும் முகமாகவும், பிற நாட்டாரிடம் பிரஞ்சு மொழி வழியாகத் தமிழினத்தின் பெருமையை எடுத்துரைக்கும் முகமாகவும் தமிழர்தம் குழந்தைகளுக்குத் தமிழறிவும், தமிழுணர்வும் ஊட்டும் முகமாகவும் **தமிழர் பண்பாட்டுக் கழகம்** என்னும் பெயரில் 1 6-80-இல், பிரெஞ்சு பேசும் உலக நாடுகளில் முதன் முதலாகத் தமிழைப் பல்கலைக் கழக

அரியணையில் ஏற்றியுள்ள செனகால் நாட்டுத் தக்கார் நகரில், ஒரு பண்பாட்டு அமைப்பு, பிரஞ்சுத் தமிழர் உறுதுணையுடன் உருவாகியுள்ளது. அமைப்பின் இடைக்காலப் பொறுப்பாளர்களாகத் தலைவர் திரு. கில்பெர்ட் இலசாந்தே, துணைத் தலைவர் திரு. கிளேபேர். பொதுச் செயலாளர் திரு. பூர் க. ப. அறவாணன், பொருளாளர் திரு. மு. சுப்பிரமணியம், பிரான்சுப் பொறுப்பாளர் திரு. மாரிமுத்து (மார்சே), புதுச்சேரிப் பொறுப்பாளர்: திரு. ப. தண்டபாணி ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர். ஆங்காங்கு வாழும் பிரஞ்சுத் தமிழர்கள் இவ்வமைப்புடன் பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப் பெறுகிறார்கள்: Association Culturelle Franco Tamoule, B. P.6107, DAKAR, SENEGAL.

3. **திருக்குறள் மன்றம் கிள்ளான் துறைமுகம், மலேசியா. திருவள்ளுவர் சிலை திறப்பு விழா:** கடந்த 29-6-80 மலேசியா, கிள்ளான் துறைமுகத்தில் தமிழ்நாட்டிலிருந்து வரவழைக்கப்பெற்ற, மாபெரும் திருவள்ளுவரின் சிலை திறப்பு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு டத்தோ **ச. சாமிவேலு** (மலேசிய அரசு பொதுப்பணி பயனீட்டுத்துறை அமைச்சர்) அவர்கள் தலைமையில் திரு. **சு. சின்னத்தம்பி** (திருக்குறள் ஆசிரியர்; திருக்குறள் மன்றம்) அவர்கள், சிலையினைத் திறந்து வைத்தார்கள்.

3. **சென்னை தமிழ்ச் சொல்லாக்க மன்றம்:** அன்னைத் தமிழை ஆட்சிமொழியாக்கிய சட்டம் நிறைவேற்றப் பெற்று, எங்கு எதிலும் தமிழ் என்னும் இலக்கு நோக்கி நடைபயிலத் தொடங்கி 24 ஆண்டுகள் முடிகின்றன. துறைதோறும் தமிழ்ச் சொற்களை, அரசுத் துறைகளும், செந்தமிழ் ஆர்வலரும் புதுக்கியும் படைத்தும் வருகின்றனர். எனினும் தமிழ்ச் சொல்லாக்கப் பணி ஒருமுகப்படுத்தப் பெற்று அனைவர்க்கும் ஏற்புடையதாக்கத் தலைமை மன்றமாகத் **தமிழ்ச் சொல்லாக்க மன்றம்** ஒன்று தேவை என்றுணர்ந்து, கடந்த 11-7-80 அன்று பிற்பகல் 5-30 மணிக்கு மாவட்ட நடுவண் நூலகத்தில் நடந்த அமைப்புக் கூட்டத்தில், மொழி ஞாயிறு **ஞா. தேவநேயப்பாவாணர்** அவர்கள் தலைவராகவும், ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனாரும், திரு. கோ. முத்து(ப்பிள்ளை) அவர்களும் துணைத் தலைவர்களாக்வும்; திரு. இரா. மதிவாணன் செயலாளராகவும், திரு. மா. பூங்குன்றன், துணைச் செயலராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

4. **கலைவாணி ஏழுமலை வாழ்க:** தூய தமிழ் எழுத்தாளரும், கட்டுரை, கதையாசிரியரும், நெடுநாளைய தென்மொழியன்பரும் ஆகிய புலவர் திரு. நா. அறிவுஒளி க. மு. திருவாட்டி செயலக்குமி அறிவுஒளி அவர்களின் மூத்த மகள் செல்வி **கலைவாணிக்கும்**. செல்வன் **ச. ஏழுமலைக்கும்**, கடந்த 18-6-80 காலை 6 மணியளவில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்குத் திரு. சீ. கோபாலகிருட்டிணனார், க. மு. அவர்கள் தலைமையேற்றார்.

திருவாளர்கள் தி. சி. இரகுபதி. ஆ. சீனிவாசன், 'தமிழம் பன்னீர்ச்செல்வம், அரிமதி தென்னகன், தாமரைக்கண்ணன், பேரா. தி. இராசகோபாலன் முதலியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். மணமக்கள் எல்லா நலனும் வளனும் பெற்று நீடூழி வாழ, தென் மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது

5. கடந்த 19-6-80 ஈரோடு தமிழீழ விடுதலை மறவன் சிவக் குமார் நினைவுநாள் கூட்டம் புலவர் திரு: செ. இராசு, க. மு. அவர்கள் தலைமையில் நடந்தது. பேரா. மு. சதாசிவம், புலவர். இரா. வடிவேலன், புலவர். செ. ஆறுமுகம், செ. அரங்கராசன் உரை யாற்றினர். திரு. குமர நடவரச ஈவப்பனுர், தமிழ்க்குமரன், தமிழடி யான், பனிமலைப்பதியன், சிலம்பு இராசமாணிக்கம், சு. தங்கவேலு, ஆவத்தி வேங்கடாசலம் ஆகியோர் பாட்டரங்கில் கலந்து கொண்ட னர். தொடக்கத்தில் அ. இராமலிங்கம் வரவேற்புரையும், இறுதி யில் பாவலர் தமிழ்க்குமரன் நன்றியுரையும் ஆற்றினர்.

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

கும் அத்தனை மாற்றங்களுக்கும் ஒரே விடிவு தமிழக விடுதலைதான் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் குரலிலிருந்து விடுதலை ஒலி கிளம்பும் அதே பொழுதில் உங்கள் மேலுள்ள கறைக ளெல்லாம் கழுவப்பட்டு விடும்; உங்கள் மேல் வஞ்சகர்கள் சுமத்தும் பழிகளெல்லாம் துடைக்கப்பட்டு விடும்; உலகத் தமிழினம் உடனே தன் இருகைகளாலும் உங்களை ஏந்திக்கொள்ளும்! உங்கள் வரலாறு விடுதலைக் கனலில் புடமிடப்பெற்றுப் பொன்போல் சுடர்விடும் இறுதியில் நீங்கள் உலகத் தலைவராகி விடுவீர்கள்! இல்லெனில் உங் களுக்கென ஓர் எதிர்காலம் இருக்காது; உங்கள் கனவெல்லாம் கானல் நீராகப் போய்விடும்! இஃது உறுதி! எனவே, எங்கே ,குரல் கொடுங்கள், **'தமிழ்நாடு தமிழர்க்கே!' 'மலர்க தமிழகம்'**

## தென்மொழி, தமிழ்ச்சிட்டு விலை கூடுகிறது!


தாள், மை பிற அச்சுப் பொருள்களின் அளவுக்கு மீறிய விலை யேற்றத்தையும் பொருட்படுத்தாது, இதுவரையிலும் **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** இதழ்களுக்கு விலை கூட்டாது, பொறுமையுடன் மிகுந்த இழப்பைத் தாங்கி வந்தோம். நிலை கட்டு மீறி விட்டதால், இழப்பை ஓரளவு குறைக்கும் நோக்கத்துடன் **அடுத்த மாதம் முதல்** இதழ்களின் விலைகளைக் கீழ்வருமாறு உயர்த்தியுள்ளோம்.

**தென்மொழி**

தனி யிதழ் : *1—25.* ஆண்டுக் கட்டணம் : *15—00*
அரையாண்டுக் கட்டணம் : *8—00*

**தமிழ்ச்சிட்டு**

தனி யிதழ் : *0—50.* ஆண்டுக் கட்டணம் : *6—00*



# நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

௫௧-ஆம் பாட்டுத் தொடர்ச்சி — 2

'செந்தமிழ் வாழ்க'வென முழக்கமிட்டுக் கூறி ஊர்வலம் வரும், அவ்விளைமையோர்க்கு வானையும் இந்நிலத்தையும் பரிசிலாகக் கொடுப்பினும் அது நிறைவாக இராது. அவ்வுணர்வின் பெருமை அக் கொடையினும் உயர்ந்தது என்றபடி.

**ஒன்றும் ஈயான் ஆகினும் ஒழிக :** அவர்களின் ஈக உணர்வுக்குப் பரிசாக வானையும் நிலத்தையும் போல் ஒன்றினையும் அவர்களுக்குத் தரான் ஆயினும் போகட்டும்.

**கொன்றும்....கொண்டு :** ஏற்கனவே நடந்த முன்னைய நாள் போராட்டங்களில் மாணவ இளைஞர்கள் பலரைச் சுட்டுக் கொன்றும் அவனின் சாக்காட்டுப் பசி அடங்காது, மீண்டும் அந்த வெறிகொண்டு.

**படையற நின்ற நடையினோரை :** எவ்வகையான கருவிப் படைகளையும் கொண்டிலராய், வெறுவராய்க் கொள்கை முழக்கத்தோடு மட்டும் ஊர்வலம் செல்லும் இவரை.

**விளையா நின்ற இளையோர் தம்மை :** தமக்காகவும் நாட்டுக்காகவும் இன்னும் பல நிலைகளிலும் விளைந்து வரவேண்டிய தன்மையுடைய இவ் விளைய மாணவரை

**மலர் முகை....போல :** மலரவேண்டிய மொட்டுகளைக் கசக்கியும் கிள்ளியும் சிதைவு செய்து நெருப்பிலிட்டுப் பொசுக்குதல் போல.

**உலர்தீ நெஞ்சினன் :** உயிர்களை வற்றடிக்கும் தீப்போலும் கொடிய நெஞ்சையுடையவன்.

**உயிர் வாங்கினனே :** அவர்களின் உயிர்கள் மேலும் நீங்கும்படி காவலர்களை விட்டுக் கொன்று தீர்த்தான்.

**ஆடல் இளமகள்...நாணும் :** நீராடல் செய்த இளமகள் ஒருத்தி அரசன் தோட்டத்து விளைந்த மாங்காயொன்று ஆற்றில் விழுந்து மிதந்து வர, அதனை அறியாமல் எடுத்து உண்டதால் அவளைக் கொன்ற கொடிய நன்னன் என்னும் அரசனும், இந்தி மொழி படிக்க மறுத்துப் போராடிய மாணவர்களைச் சுடுவித்துக் கொன்ற இவனின் வினைக்கு நாணுவன் என்று பழியும் இழிவும் சாற்றியது.

நன்னன் நிகழ்ச்சியைக் குறுந்தொகை 292-ஆம் பாட்டால் தெரிந்து கொள்க.

**மொழிக்கென...இலரே! :** தாய் மொழியைக் காப்பதற் கென்று எழுச்சி கொண்டவர் இம் மாணவரை விட, வேறு எவரும் இலர்.

**பழிக்கென...இலனே! :** அதேபோல் பழி மேற்கொள்ள எழுந்தவன் இவனினும் வேறு எவனும் இலன்.

**மயர் தீர் கொள்கை :** குற்றமற்ற கொள்கையை உடைய சான்றோர் அழுங்க சான்றோர்கள் வருந்தும்படி.

குற்றமற்ற நடுவு நிலையுள்ள சான்றோர் பலர், மாணவர்கள்மேல் அடக்குமுறை செய்து அவர்களைக் கொல்லற்க என்று வேண்டியும், அவர் மொழி கேளாது, அவர்கள் நெஞ்சம் துயருறும்படி கொல்வித் தான் என்பது.

**உயர் செந்...நின்றோரை :** உயரிய செந்தமிழ் மொழிக்குக் காப்பென நின்றவரை.

**வெய்வேட்டெஃகம் விதிர்ப்பறத் தாங்கி :** கொடிய துமுக்கிகளை நடுக்கமிலாது தாங்கி.

**கொய்துயிர்...கோலே :** உயிரைக் கொய்து துண்டித்தது ஆட்சியதிகாரத்தில் அமர்ந்த கொலைஞனின் கொடுங்கோல் ஆணை.

**புன்றலைச் சிறாஅர் :** இளமைத் தலைகளையுடைய சிறுவர் களின்.

**செந்நீர் ஆடியோன் :** குருதியில் குளித்தவன்.

**முந்நிற நெடுங்கொடி :** கோட்டையின் நீண்ட கம்பத்தில் கட்டப் பெற்ற மூன்று நிறமுள்ள பேராயக் கட்சியின் கொடி.

**மூன்றிலும் சிதைக :** அக்கொடியுடன் அவ்வரசின் ஆளுகை முற்றமும் சிதைக. மூன்றில் சிதைதல் என்றது அவ் வரசின் ஏற்றம் சிதைக என்பது.

**அன்னோன் தாங்கிய அரசும் சிதைக :** அவ்விளைஞர் களைச் சுடுவித்த முதலமைச்சர் ஏற்று நடத்திய அரசும் இனி உருக் கொளாதபடி சிதைந்தொழிக என்றவாறு. இது வஞ்சினம். முத லமைச்சர் சார்ந்து நடத்திய அரசு பேராயக் கட்சி யரசு. முதலமைச்சர் திரு. பக்தவத்சலம். இவ்வஞ்சினப் பாடல் வெளி வந்த பின்னர் அவர் அரசாட்சி அவ்வாறே சிதைந்தது. மீண்டும் அவர், அரசுக்கட்டிலேறும் வாய்ப்பின்றியே போனார்.

**முற்றா இளவுயிர் :** முதிராத இளைஞரின் உயிர்.

**தமிழ்க்கெனப் போக்கி:** இந்தி யழிப்பினின்று தமிழைக் காப்பதற்கென்று போராடி உயிர் விட்டு.

**வற்ரு நெடும்புகழ்:** வற்றுதல் இல்லாத நீண்ட நெடிய புகழ்.

**வழி வழிக் கொண்ட:** தொன்மைக் காலத்திலிருந்து இன்று வரை வழி வழியாகக் கொண்ட.

**இளையோர் காத்த எந்தமிழ்:** இளைஞரால் காக்கப்பெற்ற எம்முடைய தமிழ் மொழி.

**இனி, குலைவிலாது கிளையுறப் பொலிக:** இனிமேல், எவ்வகைக் குலைவுமிலாது, கிளைமொழிகளை ஊன்றி மேன்மேலும் பொலிவுற்று விளங்குக.

— இது வாழ்த்து!

—1938-இல் சென்னை மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்புப் பேராயக் கட்சியினர் கைக்கு வந்தது. அக்கால் முதலமைச்சராக விருந்த திரு. இராசகோபாலாச்சாரி (இராசாசி) 'இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவேன்' என்று தெரிவித்தார். அதையடுத்துத் தமிழகத்தில் இந்தி யெதிர்ப்புணர்வு தொடங்கி வலுப்பெற்றது. அக்கால் பல்லாவரம் பொதுநிலைக் கழக ஆசிரியர் உயர்திரு. மறை மலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், கோ. துரைசாமி (G. D. Naidu), பாகநேரி காசி விசுவநாதன் ஈழத்துச் சிவானந்த அடிகள், அருணகிரி அடிகள், சண்முகானந்த அடிகள், பெரியார் ஈ. வே. இராமசாமி, அண்ணுத்துரை, சண்முகவேலாயுதம், சி. டி. நாயகம், தமிழவேள் உமாமகேசுவரன், சச்சிதானந்தம், தூத்துக்குடி மாசிலாமணி, சாமி சகசானந்தா, அருள் தங்கையா, பாரிப்பாக்கம் கண்ணப்பர், முத்தையா, பரலி சு. நெல்லையப்பர், சற்குணர், இரா. பி. சேது, வச்சிரவேல், பி டி. இராசன், சௌந்தர பாண்டியன், சாத்தூர் கந்தசாமி, ஏ. டி. பன்னீர்ச்செல்வம், கா. சுப்பிரமணியனுர், கருமுத்து தியாகராசன், பண்டுவர் தருமாம் பாள், மூவாலூர் இராமாமிர்தத் தம்மையார், சென்னை மலர்முகத் தம்மையார், சரசுவதி சிற்சபை, கந்தம் உரோசம்மாள், சரோசினி மாணிக்கவாசகம் (மறைமலையடிகள் மூத்த மருமகள்). கோபிசெட்டி பாளையம் மாரியம்மாள், மறை திருநாவுக்கரசு, பரவத்து இராச கோபாலாச்சாரியார், கே. எம். பாலசுப்பிரமணியம். டி. ஏ. வி. நாதன், கே. இராமையா, பாலசுந்தரப் பாவலர், எசு. சம்பந்தம், பல்லடம் பொன்னுசாமி, மீனும்பாள் சிவராசு முதலிய அறிஞர் களும், கட்சித் தலைவர்களும், துறவிகளும், பெரியோர்களும் ஆகப் பலர் எதிர்த்து அறிக்கைகள் விடடும், மாநாடு நடத்தியும், போராடி யும், மறியல்கள் செய்தும், சிறை சென்றும், அடிதடி பட்டும் இந்தித் திணிப்பை எதிர்த்து நின்றனர்.

இப் போராட்ட எதிர்ப்பால் இந்தி நுழைப்பு ஒரேயடியாகத் தீராமல், சிறிது சிறிதாகவும், மெல்ல மெல்லவும், தமிழகத்தில் காலூன்றியே வந்தது. அக்கால் வெளிவந்த செய்தித் தாள்கள்

பலவற்றுள்ளும், இந்தி யெதிர்ப்புத் தொடர்பான கட்டுரைகள், பாடல்கள், அறிக்கைகள், தீர்மானங்கள் அனைத்தும வெளிவந்தன, ஆனால் இந்தி படிப்படியே நுழைக்கப் பெற்றே வந்தது. இடையிடையே இந்தி யெதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப் பெற்றும் பயனில்லை.

இறுதியாக, 1965 சனவரி 25-ஆம் பக்கல் மாணவர் எழுச்சிப் போராக இந்தி யெதிர்ப்புணர்வு வெடித்தது. இப் போர் பிப்ரவரி 12-ஆம் நாள் வரை தீவிரமாக நடந்தது. அக்கால் பேராயக் கட்சி தமிழகத்தில் அரசு வீற்றிருந்தது. திரு. பக்தவத்சலம் முதல்வராக அமர்ந்து, மாணவர்களின் யெதிர்ப்புணர்ச்சியைச் சற்றும் பொருட்படுத்தாது தில்லியாட்சியரின் கையாளாக விருந்து, அடக்குமுறைகளையும், வன்மங்களையும் கையாண்டு மாணவர்கள் பலரையும், பொதுமக்கள் பலரையும் சுட்டு வீழ்த்தி, நடுவணரசால் 'எஃகு நெஞ்சர்' என்று பாராட்டப் பெற்றார். அக்கால் நடந்த இந்தி யெதிர்ப்புப் போரில் ஏற்பட்ட பொதுவிழப்புகளும், உயிரழிவுகளும் நிகழ்ச்சிகளும் பற்பல. அவற்றுள் சில வருமாறு :

1) அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் இராசேந்திரனும் இளங்கோவனும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

2) கோடம்பாக்கம் சிவலிங்கமும், விருகம்பாக்கம் அரங்கநாதனும் தீக்குளித்தனர்.

3) சென்னை, கோட்டைக்கு ஊர்வலமாகச் சென்ற கல்லூரி மாணவர்களைக் காவலர்கள் அடித்து நொறுக்கியதில் ஏறத்தாழ 50 மாணவர்கள் படுகாயமுற்றனர்.

4) முப்பது பொது உந்துகள் கொளுத்தப்பட்டன.

5) கல்லூரிகள், பள்ளிகள் அனைத்தும் ஒன்றரை மாத காலத்துக்கு மூடப்பட்டிருந்தன.

6) சென்னை நகர வீதிகளில் குதிரைக் காவலர்கள் உலா வந்த வண்ணமிருந்தனர்.

7) ஆயிரக்கணக்கான மாணவியர் கறுப்புப் புடவை, சட்டையுடன் மதுரை ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

8) சனவரி 25 முதல் 28 வரை ஏறத்தாழ 2000 பேர் சிறைப் படுத்தப் பெற்றனர்.

9) அண்ணாமலைப் பல்கலைக் கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டது.

10) காவலர்கள் கல்லூரிகளுக்குள் புகுந்து மாணவர்களை அடிக்கையில் பேராசிரியர்கள் பலரும் காயம் பட்டனர்.

11) சென்னை, திருச்சி, மதுரை, காஞ்சி, சிதம்பரம், சேலம், நெல்லை, திருவாரூர், சிவகாசி, பட்டுக்கோட்டை, அரக்கோணம்

வாளவாடி, ஆரணி, இராணிப்பேட்டை, வேலூர், ஆலந்தூர், வளவனூர், இடைப்பாடி, மகுடஞ்சாவடி, திண்டிவனம், நெய்வேலி, பெங்களூர், புதுவை, கடலூர், குன்னூர், கும்பகோணம், கடைய நல்லூர், திருப்பூர், சிவகாசி, நாகர்கோயில், காரைக்கால், சாத்தூர், அருப்புக்கோட்டை, வாசுதேவநல்லூர் முதலிய ஊர்களில் தொடர்ந்து கிளர்ச்சிகள் நடந்து வந்தன.

12) சென்னைக் கடற்கரையில் இந்திப் பொத்தகங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

13) அமைச்சர் மகன் ஒருவனும், காவல் அதிகாரி மகன் ஒருவனும், அமைச்சர் ஒருவர் மருமகனும் போராட்டங்களில் கலந்து கொண்டனர்.

14) மதுரையில் மலையுந்து (Jeep)-க்கும் பேராயக் கட்சி அலுவலகத்திற்கும் தீ வைக்கப் பெற்றது.

15) மதுரையில் வடநாட்டினர் உணவு விடுதியைத் தாக்கி அதன் இந்திப் பெயர்ப் பலகைக்கும், குடியரசு நாளைக் கொண்டாட அமைத்த பந்தலுக்கும் தீ வைத்தனர்.

16) நாடெங்கும் இந்தியரக்கியின் கொடும்பாவிகள் கொளுத் தப்பட்டன.

17) சென்னை இசுடான்லி மருத்துவமனைப் பயிற்சி மருத்து வர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தனர்.

18) சென்னை பச்சையப்பன் கல்லூரிக்குள் புகுந்து பேராசிரி யர்களை அரம்பர் (ரௌடி)கள் என்று கூறி, மாணவர்களைக் காவ லர்கள் அம்மணமாக நிறுத்தி வைத்து அடித்தனர். மாணவர்களைப் பார்க்க வந்த பெற்றோர்களும் இந்தக் கொடுமைக்கு ஆளாயினர்.

19) திருச்சி, கீரனூரில் 20 அகவை முத்து என்பவர் இந்தித் திணிப்பை எதிர்த்து நஞ்சுண்டு இறந்தார்.

20) கோவையில் கடைகள் சூறையாடப்பட்டன.

21) தொடர் வண்டிகள் கொளுத்தப்பட்டன.

22) சோமனூர், திருப்பூர், கரூர், குறிஞ்சிப்பாடி, திருவொற்றி யூர், தக்கோலம், மணப்பாறை, புதுவை ஆகிய தொடர்வண்டி நிலை யங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

23) சென்னை, வேலூர், ஈரோடு, சேலம், கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், திருப்பூர் முதலிய இடங்களுக்குப் பட்டாளங்கள் அனுப்பப்பட்டன.

24) அமைச்சர்கள் சுப்பிரமணியமும் அழகேசனும் வேலை விடுப்பு நாடகம் நடத்தினர்.

25) கல்கத்தாவிலும் பள்ளிகள் மூடப்பட்டன.

26) கரூரில் காவல்துறை அதிகாரி தாக்கப்பட்டார்.

27) திருச்சி, மரக்கடை அஞ்சலகம் தீ வைக்கப்பட்டது.

28) ஏறத்தாழ 20 தொடர் வண்டி நிலையங்கள் சேதப் படுத்தப்பட்டன.

29) பொள்ளாச்சி நகரமே வெறிச்சோடிக் கிடந்தது.

30) மதுரை, கூடலூரில் இரு காவலர்கள் உயிருடன் கொளுத்தப்பட்டனர். திருப்பூரில் இரு காவல் அதிகாரிகள் உயிருடன் கொளுத்தப்பட்டனர்.

31) நூற்றுக்கணக்கான அஞ்சல் பெட்டிகளும், பொதுத் தொலைபேசி நிலையங்களும் தீக்கிரையாயின.

32) கர்னூலிலும், கேரளாவிலும், ஆந்திராவிலும் மாண வர்கள் கொதித்தெழுந்தனர்.

33) தஞ்சை அஞ்சலகம், தூத்துக்குடி அஞ்சலகம் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

34) திருச்சி, அய்யம்பாளையம் தொடக்கப்பள்ளி ஆசிரியர் வீரப்பன், சத்தியமங்கலம் உழவர் முத்து இருவரும் மேலும் தீக் குளித்தனர்.

35) சென்னை, ஆழ்வார்ப்பேட்டை மாநகராட்சிப் பள்ளிக்குத் தீ வைத்தனர்.

36) அனைத்துத் தொடர்வண்டிகளும் ஒரு கிழமை காலத்திற்கு ஓடவில்லை.

37) அரசினர் உந்துகள் பதினைந்து நாட்களுக்கு ஓடவில்லை.

38) பஞ்சாபிலும் துமுக்கிச் சூட்டில் நான்கு பேர் இறந்தனர்.

39) மொத்தம் 50 உந்து வண்டிகள் கொளுத்தப்பட்டன

40) புதுவை அரவிந்தர் பாழி தாக்கப்பட்டு தீ வைக்கப் பெற்றது.

41) இந்திப் படம் காட்டாதே என்று நாகர்கோயில், சென்னை, கோவை முதலிய இடங்களில் கொட்டகைகளின் முன் போராடித் தடுத்து நிறுத்தினர்.

42) செங்கோட்டையருகில் தண்டவாளம் பெயர்க்கப்பட்டது.

43) கல்கத்தாவிலும் போராட்டம் தொடங்கியதால், பள்ளி களை 15 நாட்கள் மூடும்படி கல்கத்தா அரசு ஆணையிட்டது.

44) ஆரணி அஞ்சலகம் சூறையாடப்பட்டது.

45) திருத்தணியில் மாணவர்கள் தொடர் வண்டிக் கடவைக் கதவுகளை உடைத்துத் தூள் தூளாக்கினர்.

46) அனந்தப்பூரில் ஏறத்தாழ 3000 பேர் தொடர் வண்டி நிலையத்தைத் தாக்கினர்.

47) 12 வானூர்திகளில் பட்டாளம் வரவழைக்கப்பட்டது.

# என் இலங்கைச் செலவு

—பெருஞ்சித்திரனார்.

அன்று பகல் 1-30 மணியளவில் இலங்கை விடுதலைக் கூட்டணித் தலைவரும், இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவருமாகிய திரு. அமிர்தலிங்கம் அவர்களும், அவர் துணைவியார் திருவாட்டி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும், இலங்கை விடுதலை இளைஞர் முன்னணித் தலைவர்களில் ஒருவருமாகிய திரு. சேனாதிராசா அவர்களும் நான் தங்கியிருக்கும் க. பொ. இ. அவர்களின் வீட்டிற்கு என்னைப் பார்க்கும் நோக்கத்துடன் வந்தார்கள். திரு. அமிர்தலிங்கம் அவர்களுடனும் பிறருடனும் இலங்கை அரசியல் செய்திகள் பற்றியும், தமிழக அரசியல் நிலைகள் பற்றியும் கலந்து பேசிக் கொண்டிருந்தேன். இடையில் எல்லாரும் ஒன்றாக அமர்ந்து திரு. க. பொ. இ. அவர்கள் அளித்த இனியவிருந்தில் பங்கு கொண்டோம். இறுதியில் திரு. அமிர்தலிங்கம் அவர்களைத் தென்மொழிச் சார்பாக ஒரு நேருரை கண்டேன் அக்கால் வினவப் பெற்ற பதினைந்து வினாக்களுக்கும், அவர் அழுத்தந் திருத்தமாகவும் தெளிவாகவும் விடைகள் இறுத்தார். (இந்நேருரையின் பொழுது கேட்கப் பெற்ற கேள்விகளும் அவற்றுக்கான திரு. அமிர்தலிங்கம் அவர்களின் விடைகளும் முன்பே தென்மொழியில் (சுவடி 15, ஓலை 1) வெளிவந்திருக்கின்றன.) மாலை 5 மணியளவில் திரு. அமிர்தலிங்கமும் அவர் துணைவியாரும் திரு. சேனாதிராசாவும் விடைபெற்றுச் சென்றனர்.

திரு. சேனாதிராசாவை முன்பே எனக்கு நன்கு தெரியும். அவரும் இலங்கை விடுதலைப் பாவலர் திரு. காசி ஆனந்தனும் முன்பே தமிழகத்திற்கு வந்திருந்த பொழுது, அவர்களுடன் தென்மொழி இல்லத்திலும் கோவையில் தென்மொழி மறை நித்தலின்பனார் அவர்கள் இல்லத்திலும் பல நாட்கள் தங்கித் தமிழீழச்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

48) குடியேற்றத்தில் மாணவர்களுக்கும் காவலர்களுக்கும் கைகலப்பு நேர்ந்து, காவலர்கள் மாணவர்கள் மேல் 14 முறை துமுக்கிச் சூடு நடத்தினர்,

49) கடையநல்லூரில் தொலைவரிக் கம்பிகள் அறுக்கப்பட்டன. அஞ்சலகப் பெயர்ப் பலகைகள் உடைக்கப்பட்டன.

50) 1965-இல் நடந்த இந்தி யெதிர்ப்புப் போராட்டத்தில் காவலர்கள் சுட்டதால் இறந்தவர்கள் மொத்தம் 68 பேர். தீக்குளிப்பில் இறந்தவர்கள் 5 பேர். தீயிடலில் மாண்டவர் ஒருவர். மக்களால் தாக்கப்பட்டு மாண்ட காவலர்கள் 4 பேர். சுடப்பட்டு இறந்த 68 பேரில் குமாரபாளையத்தில் 15 பேர்; பொள்ளாச்சியில் 10 பேர்; புதுச்சேரியில் 10 பேர்.

(தொடரும்)

சிக்கல்கள் குறித்து மிகவும் விரிவாகப் பேசியிருக்கிறோம் திரு. சேனுதிராசாவும், திரு காசி ஆனந்தனும் தமிழீழ விடுதலைக்கே தங்களை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டவர்கள். அவர்கள் இருவரிடமும் அமைந்துள்ள தமிழீழப் பற்றும், விடுதலையுணர்வும், தெளிவான அரசியலறிவும், வரையறுத்த கொள்கையீடுபாடும் பாராட்டிப் போற்றத்தக்கன. உலக நாடுகளின் விடுதலை வரலாறுகளை இருவரும் தெளிவாக அறிந்திருக்கின்றனர். இருவரும் பல முறைகள் இணைந்தும் தனித்தனியாகவும் சிறை சென்றிருக்கின்றனர். திரு. காசி. ஆனந்தன் நல்ல உணர்வுள்ள சிறந்த பாவலர். அவரின் விடுதலைப் பாடல்கள் தமிழீழ இளைஞர்களுக்கு வீறுணர்வு புகட்டும் ஊக்கவுணர்வுரைகளாக, மந்திரச்சொற்களாகப் பயன் பெற்று வருகின்றன. காசி. ஆனந்தன், சேனுதிராசா இருவரும் ஆற்றல் மிக்க பேச்சாளர்கள; சொற்பொழிவாளர்கள்; மாசு மருவற்ற அவர்களின் நாட்டுப் பற்றை இங்குள்ள எவரிடமும் காண்பது அரிது. காசி. ஆனந்தன் கலையுணர்வு உடையவராகையால், கொஞ்சம் அமைதியானவர். சேனுதிராசா சிறிது துடிப்புள்ளவர். ஆனால் தேவையான விடத்து அவரும் பிறர் எவரும் எதுவும் ஐயுறுதபடி அமைதியாகவே இருப்பார். தமிழகம் வந்திருந்த பொழுது அவர்கள் இருவரின் போராட்டப் பட்டறிவுகளையும் பல இரவுகள் தொடர்ந்து அவர்கள் சொல்லக் கேட்டு இறும்பூது எய்தினோம். அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் பட்ட, படுகின்ற தொல்லைகள்தாம் எத்தனை யெத்தனை! எததனை அடிகள்! எத்தனை உதைகள்! உயிர் போகும் அளவுக்குச் சிறைச்சாலைகளில் அவர்கள் கொடுமைகள் படுத்தப்பட்ட பொழுதெல்லாம் கூட, அவர்கள் அவற்றை அமைதியுடனும் பெருமையுடனும் தாங்கிக் கொண்டதாகத் தெரிவித்த பொழுது, அவர்கள்பால் நாங்கள் கொண்ட மதிப்பு அளவிடற்கரியதாக விருந்தது. இனி, இவர்கள் இருவருந்தாம் இப்படி என்று எவரும் எண்ணிவிட வேண்டா. தமிழீழப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அங்கிருக்கும் இளைஞர் ஒவ்வொருவரும் காசி. ஆனந்தனும், சேனுதிராசாவாகவுமே இருப்பதைஅங்குச் சென்றிருந்த பொழுது நேரில் கண்டேன். அவர்கள் அனைவரின் முயற்சியையும், ஈடுபாடுகளையும், போராட்டவுணர்வுகளையும், நாட்டுப் பற்றையும் எண்ணிப் பார்க்கின்ற பொழுது, தமிழீழம் இன்றில்லா விடினும் மிக அண்மையில், என்றோ ஒருநாள் விடுதலை பெற்றுத் தனித் தமிழீழ நாடாக மலரப் போவது மிகவுறுதி என்றே சொல்லத் தோன்றுகிறது அவ்விளைஞர்களின் அனைத்து முயற்சிகளுக்கும் நம் நெஞ்சு நிறைந்த இனிய வாழ்த்துகளைக் கூறி இனி நம் செய்திக்கு வருவோம்.

## 16. மூன்றும் நாள் மாநாடு

திரு. அமிர்தலிங்கம் இணையரும் திரு. சேனுதியும் விடை

பெற்றுச்சென்றபின், திரு. க. பொ. இ. அவர்கள், 'சரி, புறப் படுங்கள்; மாநாட்டுக்கு நேரமாகி விட்டது' என்றார். அன்று எனக்கு மாநாட்டு மூன்றாவது நிகழச்சி. காலை நிகழ்ச்சி மாதர் அரங்கும், பிற்பகல் நிகழ்ச்சி. பாட்டரங்கும் நடைபெற்றிருந்தன. அன்று மாலை 6 மணியளவில் நடைபெற விருந்த நிகழ்ச்சியில் என் சிறப்புரை யிருந்தது. இசையரங்கமும் என் உரைக்குப் பின் இருந் தது. மாலை 6-30 மணியளவு புறப்பட்டு க. பொ. இ. அவர்களுடன் பொன்கொடு தீவு (புங்குடு தீவு) சென்றேன். 7 மணியளவில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருக்குறளில் ஏற்பட்ட கலப்புகள், திருக்குறள் தோன்றிய குமுகாயச் சூழ்நிலை, அதன் பின்னர் தமிழர்க்கு ஏற்பட்ட படிப்படியான தாழ்ச்சிகள், அவற்றினின்று மீளு வதற்கு நாம் செய்ய வேண்டிய முயற்சிகள், நம் தாய்மொழியாகிய தமிழின் தூய்மை காக்கப்பெற வேண்டிய தேவை, தாய்மொழி யுணர்வின் அடிப்படையில் ஏற்படவிருக்கும் இனவுணர்வு—இவை பற்றி யெல்லாம் என் சொற்பொழிவு இருந்தது. இறுதிச் சொற் பொழிவாகையால் இரண்டரை மணி நேரம் மிக்க உணர்வுடன் பேசினேன். மக்கள் மிகுந்த ஆர்வத்துடனும் எழுச்சியுடனும் கேட்டு மகிழ்ந்தனர்.

இரவு 10-30 மணிக்கு மேல் வீடு திரும்பினோம். அதன் பின்னர் உணவருந்தி விட்டுப் படுக்கப் போகும் பொழுது மணி 12 ஆகி விட்டது. படுத்து அரை மணியளவில், நான் தங்கியிருந்த அறை யிலிருந்த மின் விசிறி பழுதடைந்து அதிலிருந்து ஒருவகைத் தீ நாற்றம் வந்ததை யடுத்து, நான் வேறு அறையில் படுக்கை போட்டுக்கொண்டேன். புதிய அறையில் படுத்ததாலும், மெத்தை யைத் தரையில் போட்டுக் கொண்டதாலும் இரவு 2, $2\frac{1}{2}$ மணி வரை எனக்குத் தூக்கம் வரவில்லை.

மறுநாள் மாலையில் வேறு, கொழும்புவில் உள்ள பம்பலப்பிட்டி என்னும் ஊரில் எனக்குச் சொற்பொழி விருந்தது. காலை நான்கு மணிக்கு எழுதல் வேண்டும் குளித்து விட்டு, 6 மணித் தொடர் வண்டிக்குப் போக வேண்டும். திரு. இராமலிங்கம் என்னோடு வரு வார். இதுபற்றி யெல்லாம் படுக்கப் போகும் முன் க. பொ. இ. எனக்குச் சொல்லியிருந்தார். எனவே அன்று இரவு நெடு நேரம் தூக்கத்துக்குப் போராடியபின், ஓரளவு தூங்கியிருந்து மறுநாள் விடியல் 4 மணியளவில் கண் விழித்தேன். உடனே குளித்து விட்டுத் தொடர் வண்டிக்கு நானும் இராமலிங்கமும் புறப்பட்டோம். நிமலன் மலையுந்தில் எங்களைத் தொடர் வண்டி நிலையத்தில் கொண்டு வந்து விட்டார். இடையில் சாப்பிடுவதற்காகச் சில கோதுமை அப்பங் களைத் திருவாட்டி இரத்தினம் கொடுத்திருந்தார். (தொடரும்)

# மக்களை இடுகாட்டிற்கு அனுப்பும் பன்னாட்டு மருந்துக் குழுமங்கள்

—"On Looker" ஏப்ரல் இதழில் வெளிவந்த ஒரு கட்டுரையைத் தழுவியது.

அமெரிக்காவைச் சேர்ந்த சில பன்னாட்டு மருந்துக் குழுமங்கள், தங்களுடைய புதிய மருந்துகளைத் திறன் அறிவதற்காக இந்தியக் குரங்குகளைப் பயன்படுத்தி வருகின்றன என்பது பலருக்குத் தெரிந்திருக்கும். இவ்வாறு பயன்படுத்துவது உயிர்க்கொலை என்று பல இதழ்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆனால், அதைவிடப் பெரிய கொடிய செயல் ஒன்றை அக்குழுமங்கள் மேற்கொண்டு வருவது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். அமெரிக்கப் பன்னாட்டு மருந்துக் குழுமங்கள் இந்தியக் குரங்குகளை மட்டுமல்லாமல், இந்திய மக்களையே தங்களுடைய மருந்து ஆராய்ச்சிகளுக்குக் காவு ஆடாக (பலியாடாக)ப் பயன்படுத்தி வருகின்றன.

சில முகாமையான உயிர் காப்பாற்றும் மருந்துகள் என்று சொல்லப்படுபவை, சில கடுமையான வேறு விளைவுகளைக் கொடுப்பதால், அவை மேலை நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளன. இம் மருந்துகள் விலங்குகளைக் கொண்டு மட்டுமே திறனறியப்பட்டுள்ளன. ஆனால் இவற்றை ஏராளமாக உண்டாக்கம் செய்து, தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அமெரிக்கக் குழுமங்கள் ஏற்றுமதி செய்கின்றன. உலக மக்களைக் கொள்ளையடித்துச் சேர்த்த முதலைப் பெரிய பெரிய ஆய்வுகளில் பயன்படுத்துகின்ற பன்னாட்டு முற்றுரிமைக் குழுமங்கள், தங்களின் மருந்துகளைத் திறனறிய ஏழைஇந்திய மக்களைக் காவு கிடாயாக ஆக்குவதில் கவலைப்படுவதே இல்லை.

புதிய மருந்துகளை உண்டாக்குவதற்குப் பலகோடி உருபா செலவாகும். சில சமயம் இறுதியில் அம் மருந்துகள் எதிர்பார்த்த பயனைக் கொடுக்காமல், பயனற்றுப் போய்விடும். புதிய மருந்துகள் ஏற்கெனவே நீடிக்கின்ற மருந்துகளைவிட ஆற்றல் உள்ளதாக இருக்க வேண்டும். மேலும், பிற தாக்கங்களைக் கொடுக்காமலும் இருக்க வேண்டும். முதலில் புதிய மருந்துகள் விலங்குகளிடையே திறனறிதல் செய்யப்படுகின்றன அதன்பின் முறைப்படி பெரிய அளவில் மாந்தரிடையே திறனறிதல் செய்யப்பட வேண்டும். இந்தத் திறனறிதலுக்கு அமெரிக்கக் குழுமங்கள் தென்கிழக்காசியா ஆப்பிரிக்கா நாட்டு மக்களையே பயன்படுத்துகின்றன. மேற்கூறிய நாடுகளின் மக்கள்தம் அறியாமையை அக்குழுமங்கள் பயன்படுத்திக் கொள்கின்றன.

சில மருந்துகள் ஒப்பற்ற மருந்துகள் என்றும், உயிர் காக்கும் மருந்துகள் என்றும் பெரிய அளவில் விளம்பரப்படுத்தப் பெறுகின்றன. ஆனால், அம் மருந்துகள் அவை உண்டாக்கப்பட்ட நாடுகளிலேயே தடை செய்யப்பட்டுள்ளன என்ற செய்தி மறைக்கப்படுகிறது. மருத்துவ இதழ்களைப் படிக்கும் வழக்கமில்லாத பெரும்பான்மையான இந்திய மருத்துவர்கள் அறிந்தோ அறியாமலோ, பன்னாட்டுக் குழுமங்கள் இந்திய மக்களைக் காவு கிடாயாக்கும் முயற்சிக்கு உடந்தையாக இருக்கின்றனர்.

எடுத்துக்காட்டாகச் சில மருந்துகளைப் பார்க்கலாம் 1960-ஆம் ஆண்டுக் காலத்தில் 'அமீபியா' என்னும் நோய்க்கு 'மெட்ரோனிடாசோல்' (Metronidasol) என்ற மருந்தே ஈடு இணையற்றது என்று அமெரிக்கக் குழுமங்கள் விளம்பரம் செய்தன. அக் குழுமங்களின் இந்தியக் 'கிளைக் குழுமங்கள்' அம் மருந்தை ஏராளமாக இந்தியாவில் உண்டாக்கம் செய்து விற்பனை செய்தன. ஆனால் சில ஆண்டுகள் கழித்து, அம் மருந்து எலிகளிடம் புற்றுநோயை உண்டாக்குவது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக அம் மருந்து அமெரிக்க நாட்டு மருந்துச் சந்தையில் திரும்பப் பெறப்பட்டது. ஆனால் அம் மருந்து இன்றும் இந்திய மருந்துச் சந்தையில் ஏராளமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எலிகளிடம் புற்றுநோயை உண்டாக்கும் இம் மருந்து, மாந்தர்களிடமும் அந்நோயை உண்டாக்குகிறதா என்பதைக் கண்டறிய இந்திய மக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

'டெட்ராசைக்கிளின்' (Tetracycline) என்று சொல்லப்படுகின்ற ஒரு மருந்து பொதுவாக எல்லா மருத்துவர்களாலும் கொடுக்கப்படுகிறது. ஆனால், இம்மருந்து பத்து அகவைக்கு உட்பட்ட குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டால், அது குழந்தைகளின் உடல் உறுப்புகளை -பல், எலும்பு போன்றவற்றைக் கடுமையாகத் தாக்குகிறது என்று இந்நாளில் தெரியவந்துள்ளது. இது தெரிந்தவுடன் அம்மருந்து குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுவது அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்கக் குழுமங்கள் அம் மருந்தைக் குழந்தைகளுக்காக இன்றும் இந்தியாவில் உண்டாக்கம் செய்து விற்பனை செய்து வருகின்றன. இதற்குக் காரணம், இந்திய மக்கள் கண்டனக் குரல் எழுப்பமாட்டார்கள் என்ற நம்பிக்கைதான்.

ஏழை நாடுகளில் எலும்புருக்கி நோய் பொதுவாக அதிகம் நீடிக்கிறது. எனவே, கொள்ளைக்கார மருந்துக் குழுமங்கள் எலும்புருக்கி நோய்க்கான மருந்துகளைப் போட்டி போட்டுக்கொண்டு உண்டாக்குகின்றன.

"திசெடாசோன்" (Thiscetasone) என்ற மருந்து ஒருகாலத்தில் புகழ்பெற்றதாக இருந்தது. ஆனால், அது கடுமையான தோல் நோய்களுக்கு இட்டுச் சென்றது. இந்த உண்மை பன்னாட்டுக் குழுமங்களால் மூடி மறைக்கப்பட்டது.

"ஈதம்பூடால்" (Ethambutol) என்ற எலும்புருக்கி நோய் மருந்து, கண்ணின் "இரெடீனு" என்னும் பகுதியில் ஊறு செய்தது. இதனுல், இது கண் பார்வையை இழக்கச் செய்கிறது என்ற உண்மை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தொடர்ந்து முற்றுரிமைக் கொள்ளையர்கள் இம்மருந்தை இந்திய மக்களிடம் ஒப்பற்ற மருந்து என்று விற்று வருகின்றனர். இந்திய மக்களின் மீது முற்றுரிமைக்காரர்கள் கொண்டுள்ள "கடுமையான அன்பே" இதற்குக் காரணமாகும்.

இதேபோல், பல மருந்துகள மாந்தனுக்குத் தீங்கு விளைவிக்கின்றன என்ற உண்மை தெரியவந்த பிறகும் அவை, முற்றுரிமைக் குழுமங்களால் இந்தியா போன்ற நாடுகளில், உண்டாக்கம் செய்யப் பட்டு, விற்பனை செய்யப்படுகிறது.

இந்திய 'உணவு, மருந்துக் கட்டுப்பாட்டுத்துறை' உண்மை தெரிந்திருந்தும் மேற்கண்ட மருந்துகளுக்கு இந்தியாவில் இசைவு தந்து வருகிறது.

பன்னாட்டுக் குழுமங்கள் மேற்கண்ட மருந்துகளை இவ்வாறு குடியேற்ற நாடுகளில் விற்பனை செய்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலாவது காரணம், இங்கு மக்கள் தொகை மிகுந்து இருத்தலாகும். மருந்தாய்வுகளுக்கு மக்கள் தொகை மிகுதியாய் உள்ள நாடுகளே மிகவும் ஏற்றவையாகும். அங்குதான் பெரிய அள வில் திறனறிதல் செய்ய 'வாய்ப்புகள்" உள்ளன.

மக்களின் கல்வி யறிவின்மை மற்ருெரு காரணமாக அமை கிறது. மருத்துவர்களிடம் செல்கின்ற மக்கள் தங்களுக்கு என்ன மருந்துகள் கொடுக்கப்படுகின்றன என்பதே தெரியாமல் இருக்கின்ற னர். இந்திய மருத்துவர்களும் நோயாளிகளிடம் தாங்கள் கொடுக் கும் மருந்துகள் பற்றிய விளக்கங்களைக் கூறுவதே இல்லை. தவறிப் போய் யாராவது கேட்டால், 'அதிக வாயாடிகள்' என்று மருத்துவர் களால் திட்டப்படுகின்றனர். ஆனுல், மேலை நாடுகளில் மக்கள் அவ்வாறு இருப்பதில்லை மருந்துகள் பற்றிய முழு விளக்கத்தை நேரில் கேட்டோ, மருத்துவ இதழ்கள் மூலம் அறிந்தோ, அதன் பிறகுதான் அம்மருந்துகளை ஏற்றுக்கொள்கிருர்கள்.

அடுத்து, தவறுகளுக்குப் பொறுப்பாகின்ற மருந்துக் குழு மங்களும், மருத்துவர்களும் எத்தகு ஒறுத்தலுக்கும் உட்படுவதில்லை.

மேலை நாடுகளில் நிலவுகின்ற "உணவு—மருந்துக் கட்டுப் பாட்டுத்துறை" (Food and Drugs Administrat.on) கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது ஆனுல் இந்தியாவில் உள்ள அத்துறை (F. D. A) அது பற்றிக் கவலைப்படுவதே இல்லை.

(தொடர்ச்சி 22-ஆம் பக்கம்)

# அறஞ்சொல்லி நிற்பாள் அவள்!

—புலவர். பொதிகைச்செல்வன், பவானி.

(புலவர். திரு. பொதிகைச்செல்வன் அவர்கள் தூய நல்லுணர்வும் அறிவாற்றலும் மிக்க சிறந்த தமிழறிஞர். அரிய தமிழ்ப் பாடல்கள் எழுதுவதில் வல்லவர். அண்மையில் அவர் உடல்நலமின்மையால், மருத்துவமனையில் இருந்த பொழுது, நம் ஐயைப் பாவியம் இரு பகுதிகளையும் படித்துச் சுவைத்திருக்கின்றார். நோயுற்ற நிலையிலும் தமிழ் நூல்களைச் சுவைக்கும் அவர் தமிழார்வம் போற்றற்குரியது. அவர் சுவைத்த ஐயைப் பாவியத்தைப் பற்றிப் படுக்கையிலிருந்து கொண்டே நமக்குக் கீழ்க் காணும் ஒரு மடலையும் ஐயை யைப் பற்றிய திறனுரைக்கும் பத்து வெண்பாக்களையும் விடுத்து வைத்தார். அவர் மடற் பகுதிகளையும், பாடலையும் இங்கு வெளியிட்டுள்ளோம். அவற்றின் வழி, திரு. **பொதிகைச் செல்வன்** அவர்களின் நல்லுளமும் தமிழீடுபாடும் புலமையும் உயரிய பண்பும் நன்கு விளங்குகின்றன. புலவரவர்களின் தூய தமிழ்த்தொண்டு என்றும் சிறந்திலங்க நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகின்றோம். —பொறுப்பாசிரியர்.)

உயர்திரு. பெருமதிப்பிற்குரிய பேரன்புகெழுமிய ஐயா அவர்கட்கு, வணக்கம். ......எனக்கு இரண்டு திங்களாகவே உடல்நலமில்லை. தங்களை முதலில் பார்க்க வந்த போதே உடல்நலமில்லாத நிலையில் தான் வந்தேன். ஆனால் தங்களிடம் அதைக் குறிப்பிடவில்லை. அங்கிருந்து வந்ததும் ஈரோடு மாவட்ட மருத்துவ மனையில் 10 நாள் படுக்கையில் தங்கி மருத்துவம் பெற்றேன். அப்போது தங்களருமைப் பாவியமான **ஐயை** யைப் பன்முறை படித்துப் படித்துச் சுவைத்துப் பேரின்பமும் பெருமகிழ்வும் உற்றேன். ஐயை தமிழ்த்தாய் பெற்ற தனிப் பெரும் தவமகள் என்பதில் ஐயமில்லை. ஐயை எனதகத்தை ஆட்கொண்ட தன்மையை யெல்லாம் யான் தற்போது எழுதும் நிலையில் இல்லை. யான் இன்னும் வீட்டில் படுக்கையில்தான் இருக்கிறேன். நலம் பெற்ற பின் 'ஐயை'யைப் பற்றி விரிவான திறனாய்வு எழுத மிகவும் வேட்கை கொண்டிருக்கிறேன்.

தற்போது யான் மருத்துவ விடுப்பிலிருந்து மருந்து உண்டு வருகின்றேன். நோய் மிகவும் கடுமையாக இருப்பதால் மனக் கவலைக்கும் ஆட்பட்டு மிகவும் வருந்துகின்றேன். இந்நிலையிலும் ஐயை எனக்குத் தரும் ஆறுதலும், மகிழ்வும் இன்பமும் என்னவென்று சொல்வேன்! ஐயை தந்த அளப்பரும் இன்பம் ஈரோடு மருத்துவமனையில் சில வெண்பாக்களாக வெளிப்பட்டன. அவற்றை இத்துடன் தங்கட்கு அனுப்பியுள்ளேன். அவற்றை நம் தென்மொழியில் வெளியிட்டு எனக்கு மகிழ்வும், ஊக்கமும் அளிக்க வேண்டு

கிறேன்....யான் 'ஐயை'பால் கொண்ட பேரன்பிற்குக் காரணம் அவள் முழுமை சான்ற தமிழ்ப் பெண்மை ஓவியமாய் என் உள்ளத்திற்குக் காட்சி தந்து எனக்குக் கழிபேருவகை யூட்டியதுதான். யான் எந்தத் தமிழ் நூலைக் கற்கையிலும் இவ்வளவு உள்ளம் நெகிழ்ந்தேனில்லை; ஒரு துளிக் கண்ணீரும் சிந்தினேனில்லை. 'ஐயை'யைக் கற்றபோது நெஞ்சம் பெரிதும் நெகிழ்ந்தேன்; உண்மையிலேயே கண்ணீர் சிந்தினேன். அன்புகூர்ந்து இம்மொழிகளை யான் தங்கட்குக் கூறும் முகமன் உரையாகவோ, வேறு வகையாகவோ எடுத்துக்கொள்ள வேண்டாமென்று தங்களை மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். என் உள்ளம் உணர்ந்த உண்மை உரைகளையே மொழிகின்றேன். தமிழ்ப் பண்பு மிகுந்த உள்ளங்கள் நாட்டில் மிகமிக, ஐயையின் தகவும், உயர்வும், பெருமையும், பாநலச் சிறப்பும் ஓங்கி உயரும் என்று நான் உறுதியாய் நம்புகின்றேன். ஐயை யைப் படைத்த தங்கள் உள்ளம் உயர் தமிழ் உள்ளம்; தமிழர் நன்றியோடும் அன்போடும் பற்றோடும் மதிப்போடும் போற்ற வேண்டிய பேருள்ளம். 'ஐயை' தங்கட்கு என்றும் அழியாப் பெரும் புகழை—அரும்புகழைத் தந்துவிட்டாள் என்பதே என் உறுதிமொழி! அத்தகு பெண்மை யோவியத்தைப் படைத்துப் பேரின்பம் தந்த தங்கள் சீருள்ளம் வாழ்க! வெல்க! என்று என்றும் போற்றி நிற்பேன்.

**—பொதிகைச்செல்வன், பவானி**

1. மெய்யை உரைக்கின்றேன்; மேன்மைத் தவமகளாம்
**ஐயை** எனதகத்தை ஆள்கின்றாள்!—பொய்யைப்
புறந்தள்ளி என்நெஞ்சம் பொன்போல ஒளிர
அறஞ்சொல்லி நிற்பாள் அவள்!

2. உள்ளத்தில் **ஐயை** உறைந்திடவே ஓரின்ப
வெள்ளத்தில் நீந்தி மிதக்கின்றேன்!—பள்ளத்தில்
வீழ்ந்தே கிடப்பாரும் மெய்ம்மைத் தமிழ்வாழ்வு
வாழ்ந்தே உயர்வார் மனம்!

3. தெய்வவொளிக் காதல் திறம்கண்டேன்! வானத்தைப்
பெய்யென்று பெய்விக்கும் பேராற்றல்—கைக்கொண்ட
ஒப்பிலாக் கற்பின் ஒருபே ரொளிகண்டேன்!
தப்பிலா **ஐயையிடம்** தான்!

4. வெண்மைத் தமிழ்ப்பண்பின் வார்ப்படமாய் வாழுமொரு
பெண்மைக்குக் காட்டொன்று பேசென்றால்—
உண்மையிலே
செந்தமிழ்ப் பண்பின் திருவுருவாம் **ஐயை** யைநான்
தந்திடுவேன் காட்டாகத் தான்!

5. ஒருமை மனம்கொண்ட ஊற்றமோ? ஓங்கும்
பெருமைத் தமிழ்ப்பெண்மைப் பேறே? — அருமை
அறத்தின் குரலோ? அடடா! அவ் வையைத்
திறத்தின் நிகரேது? செப்பு!

6. வள்ளுவரின் பெண்மை வளமெல்லாம் ஓருருவாய்
உள்ளுருக வந்த ஒருபெண்ணுள் தெள்ளுபெருஞ்
சித்திரனுர் பெற்றெடுத்த சீர்வளரும் ஐயையன்றே?
இத்தரையில் உண்டோ இணை?

7. தன்னே ரிலாத தனித்தமிழின் ஐயையிலே
என்னே சுவையென் றெடுத்துரைக்க—இன்னே
எவரால் இயலும்? எழுத்தசைசீர் பாட்டால்
கவராத நெஞ்சமொரு கல்!

8. பாவியத்தை நானே படிக்கின்ற போதெல்லாம்
ஆவி உருகி, அகமுருகி — மேவும்
உடலும் உருகி உருகிவிடு கண்ணீர்
கடலும் இணையாமோ? காண்!

9. சேரனும் நெய்தலும் திங்கள்தொறும் பாடுகின்ற
ஈர இரங்கல் இசைகேட்டுச் – சாரல்
வளரும் புதினி மலையதனைச் சுற்றித்
தளரும் மனப்பறவை தான்!

10. அன்புத் தமிழீர்! அமிழ்தூறும் நம்பெண்மைத்
தென்புதனைக் காட்டு பெருஞ் சித்திரனுர் — முன்புவரு
செந்தமிழ்த்தாய் செய்த செழுந்தவத்தின் தோன்றலெனச்
சிந்தையிற் கொள்வீர் தெளிந்து! 0

---

(19-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் 'உணவு, மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை' (F. D. A.) அயலகக் குழுமங்களின் உயிர்க் கொலைக்கு உதவியாகவே இருந்து வருகிறது. இந்திய மக்களைக் கொள்ளையடிக்கவும், உயிர்க் கொலை செய்யவும் அது பன்னாட்டுக் குழுமங்களுக்கு உதவி செய்து வருகிறது.

பன்னாட்டு மருந்துக் குழுமங்கள் இந்திய மக்களைக் கொள்ளையடிப்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், அவர்களைப் புதிய மருந்துகளைத் திறனறிவதற்கான மாந்தக் குரங்குகளாகவும் பயன்படுத்தி வருகின்றன.

—நன்றி : ''சமரன்''; மே, 1980.

[இக் கட்டுரையில் பயன்படுத்தப் பெற்றிருந்த பிற மொழிச் சொற்கள் தவிர்க்கப்பட்டுத் தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.]

# ஊழின் ஆட்சியும் ஆள்வினையின் மாட்சியும்

— சி. அரசிறைவன், தஞ்சை.

பிறழ உணரப்பெற்ற, உணர்த்தப்படுகின்ற பல திருக்குறள் கொள்கைகளில் ஊழ்க் கொள்கையும் ஒன்று. ஊழும் விதியும் ஒன்று என்றே கருதி வருகின்றனர். ஆனுல், ஊழ் வேறு, விதி வேறு என்பதனை அச்சொற்களின் வேறுபாடு நமக்குக் காட்டு கிறது. எல்லாம் முன்பே திட்டமிட்டபடி, எந்தவகை மாற்றமு மின்றி, விதித்தபடி நடக்கும் என்பதையே விதி என்கின்றனர் சமய நூலார். பண்டைய கிரேக்கர் கொள்கையும் இதுவே. இதனையே மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் கணியன் பூங்குன்றனுரும்

"நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப்படூஉம்" — (புறம் 192) என்ருர். விதி என்பதனை முறை என்ற சொல்லால் குறித்தார். முழுதும் பழுதற்ற முத்தமிழ்ப் பாவியம் இயற்றிய இளங்கோவடிகளும் விதியை ஊழ் என்ற சொல்லால் குறித்ததோடு, பல இடங்களிலும் சாலக்கற்களைப் போல் நெடுக நினைவுறுத்தி ஊழின் வலிமையை விதந்து மொழிந்தார். ஒருவகையில் சிலப்பதிகாரம் முழுமையும் ஊழதிகாரமாக அமைந்துள்ளதை எவரும் மறந்து விடுவதற்கில்லை.

## வள்ளுவர் சுட்டும் ஊழ் :

ஊழ் அதிகாரத்திலுள்ள குறிப்புகளை மட்டும் வைத்துக் கொண்டு பார்க்கும் பொழுது மேற்சுட்டிய கொள்கையில் உடன்பாடு உடையவர் போல் வள்ளுவர் தோன்றுவார்! ஆள்வினை, மடி (371) அறிவு, அறியாமை (372, 373), இருவகைச் செல்வம் (374) பொருள் துய்ப்பு (377), துறவு (378), இன்ப துன்ப நுகர்வுகள் (379) ஆகியவற்றிற்கு ஊழ் காரணம் என்று குறள் குறிப்பிடுவது உண்மையே! ஆனுல், இவற்றையெல்லாம் பின்வரும் பல இடங்களில் மறுத்து மாந்த ஆற்றலை முதன்மைப்படுத்தி முயற்சிக்குப் பெருமை சேர்ப்பதை எண்ணிப் பார்க்கத் தவறி விடுகிருேம்.

## உலகத்து இயற்கை :

அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கத்தை ஊழுக்குத் தந்த பெருமை வள்ளுவர் ஒருவர்க்கே உண்டு. இருவேறு உலகத்து இயற்கை (374) உலகத்து இயற்கை அறிந்து செயல் (637) என்ற இடங்களில் ஊழ் என்பது உலகத்து இயற்கை என்ற விளக்கத்தைத் தந்தார். இதனை ஆங்கிலத்தில் 'Nature' என்கின்றனர்.

வெறும் இயற்கை என்னது உலகத்து இயற்கை என்று ஏன் குறிப்பிடவேண்டும்? உலகு என்ற சொல்லை உயர்திணை, அஃறிணைப் பொருள்களில் முறையே 841, 20 ஆகிய குறள்களில் ஆள்வதைக் காணலாம். ஆக, உலகத்தின் இயல்புகள் முழுமையையும் உள்ளடக்கி உலகத்து இயற்கை என்றார். இவ்வியற்கைக்கு உட்பட்டுத்தான் அனைத்தும் நடைபெறுகின்றன என்பதனை யாரே மறுக்க வல்லார்?

**மூவகை விளக்கம் :**

ஊழை, மெய்யறிவியல், பகுத்தறிவியல், உலகியல் ஆகிய மூந்நிலைகளில் விளக்க முடியும். இவ்விளக்கங்களை ஒவ்வொருவரும் அவர்தம் அறிவு நிலைகளுக்கேற்ப ஏற்றுக்கொள்வர். விளக்கத்தில் வேறுபாடு உண்டே தவிர, விளைவில் முடிவில் எல்லாம் ஒன்றுதான்! விளக்கத்தின் பொருட்டு அவற்றை மூவேறு கோணங்களில் காண்கிறோம். மூன்று கோணங்கள் இருந்தாலும் முக்கோணம் ஒன்றுதானே.

**மெய்யறிவியல் விளக்கம் :**

உயிர்களின் செயல்களைப் பொதுவாக 'வினை' என்று குறிப்பிடுகிறோம். இறைவனின் செயலை அருட்செயல் என்பர் ஆன்றோர். உயிர்களின் செயல் இறையருள் மூலம் திரும்பிச் செயலுறுவது ஊழ்வினை ஆகும். எனவே, ஊழில் இறையாற்றலும், மாந்த முயற்சியும் இணைந்து செயல்படுகின்றன.

இறைவன் ஒன்றை உயிர்களுக்கு விதிக்குமுன், உயிர்களின் முயற்சியையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறான். தன்னுற்றலை அழுத்தந் திருத்தமாக நம்பிக் காத்துக்கொள்ளாத ஒன்றினை இறையாற்றலும காப்பதில்லை என்றார் மெய்யறிவுச் செம்மல் எமர்சன். ஊழ் அறத்தோடு தொடர்புடையது; இக் குறிப்புத் தோன்ற ஊழ் அதிகாரத்தை அறத்துப் பாலில் வைத்தார். இறைவனையும் அறவாழி (8) என்றார்.

**பகுத்தறிவியல் விளக்கம் :**

அறிவுணர்ச்சி முனைப்புறத் தோன்றி, எதனையும் கரணிய கருமத்திற்கு உட்படுத்திப் பார்ப்பதை பகுத்தறிவென்கிறோம். பகுத்தறிவுப் பார்வையில், அறியாமையே விதியின் கைப்பாவை என்பது தெளிவாகும்! அறிவு எல்லாருக்கும் தெளிவாக இருந்து விட்டால், விதியும் இல்லை; விதித் தவறும் இல்லை. அறிவுத் தெளிவின்மை ஊழுக்கு வித்தாகிறது. முக்கால உணர்வும், அறிவுத் தெளிவும் உடையவர்களை ஊழ் ஒன்றும் செய்யவியலாது. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார் (353), எதிரதாக் காக்கும் அறிவினர் (429) ஆவது அறிவார் (427) ஆகியோரை ஊழ் என்ன செய்ய இயலும்? விளங்

கிய தூய அறிவு நிலையை வாலறிவு என்றும் அதனை அடைவதையே வாலறிவனாக விளங்கும் இறைவனை அடைவதாகும் என்றும் அந்நிலையை அடையாவிட்டால் கற்றலால் ஆகும் பயன் இல்லை என்றும் தன்னுடைய இரண்டாவது கூற்றிலே தெளிவு செய்திருப்பதை இங்கே நினைவு கூறுங்கள்! மேலும் அறிவின்மை இன்மையுள் இன்மை (841) என்றும், அறிவுடையார் எல்லாம் உடையார் (430) என்றும் அறிவின் சிறப்பினைச் சுருங்கச் சுட்டினார்.

**உலகியல் விளக்கம் :**

உலகியல் வாழ்க்கையில் இரு கூறுகள் உள. ஒன்று தனி வாழ்க்கை; பிறிதொன்று கூட்டு வாழ்க்கை. இவ்விரு நிலைகளும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்றனடிப்படையில் வாழ்வின் சிக்கல்கள் பெருக்கமடைகின்றன. அவை மேலும் ஒவ்வொன்றுடன் மோதி எண்ணிறந்த புதிய சிக்கல்கள் உருவாகின்றன. குமுகாய அமைப்பும், உலகவமைப்பும் பல்வேறு சிக்கல்கள் நிறைந்தவாக விளங்குகின்றன. நம் எதிரே ஒருவர் வருகின்றார் என்று வைத்துக் கொள்ளுவோம். அவர் நம்முடன் மோதாமல் அல்லது மோதிச் சண்டை செய்து அல்லது எதிர்பாராமல் நமக்கு உதவி செய்து மீளலாம். இயலக்கூடிய இம்மூந் நிகழ்வுகளை ஈசன் செயலாக ஔவையார் குறிப்பிடுகின்றார்.

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்" - நல்வழி 27.

அனைத்தும் காரண கருமங்கட்கு உட்பட்டுத்தான் நடக்கின்றன. இதனை ஆங்கிலத்தில் 'Cause and Effect' என்கின்றனர். அனைத்தையும் காரணங்கள் காட்டி விளக்குவது என்பது இயலாத தொன்றாகும். ஆக, விளங்கங்கட்கு அப்பாற்பட்டு நிகழ்கின்றனவற்றை ஊழ் என்று கொள்கின்றனர்.

**ஊழைக் குறிப்பிட்டதன் நோக்கம் :**

ஊழைக் குறிப்பிட்டது, அதனை நம்பி ஏமாறிப் போவதற்காகவா? பின் ஏன் குறிப்பிட்டார்? வாழ்க்கையின் நிலையாமையைப் பற்றிப் பேசாத நூல்கள் உலக இலக்கியத்தில் பெரும்பாலும் இல்லை எனலாம். அந்த அளவிற்கு நிலையாமையை வலியுறுத்தி உள்ளனர். வள்ளுவரும் நிலையாமை பற்றி ஓர் அதிகாரம் வகுத்து, செல்வ நிலையாமை யாக்கை நிலையாமை ஆகியவற்றை விளக்குகிறார். எதற்காக விளக்கினார்? வாழ்வாவது மாயம்; மண்ணாவது திண்ணம் என்பதற்காகவா? நில்லாதவற்றை நிற்கின்ற சிறுபொழுதுக்குள் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக அன்றோ குறிப்பிட்டார்.

இவ்வாழ்வியல் நுட்பம் நாலடியாரிலும் மறவாது 'யாக்கை நிலையாமை' அதிகாரத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

"புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை" —நாலடியார்-29.

மண்தேய்த்த புகழினுன் கோவலனும், பெருங்குணத்துக் காதலாள் கண்ணகியும் வேறுபடு திருவின் வீறுபெறக் காண மனையறம் நடத்துகின்றனர். இதனை விளக்குகின்ற மனையறம் படுத்தக் காதையை ஒரு வெண்பாவால் முடிக்கின்ருர் இளங்கோவடிகள். வெண்பாவின் ஈற்றிரண்டடிகளை நோக்குங்கள்!

"தொலையாத இன்பமெலாந் துன்னினர் மண்மேல்
நிலையாமை கண்டவர் போல் நின்று".

நிலையாமையின் தன்மையை உணர்ந்தவர்கள் நிலையானவற்றை விரைவில் செய்து முடிக்க முயலுவார்கள் என்பதனை எவ்வளவு அழகாகவும் நுட்பமாகவும் விளக்கியுள்ளார் பாருங்கள்.

இத்தகைய குறிப்புக் கண்ணோட்டத்தில்தான் ஊழை நம்பி ஏமாறிப் போகாமல், அதனை எதிர்த்து உடைத்தெறிந்து, வெற்றி கண்டு வாழ்வாங்கு வாழ்வதற்காகவே ஊழ் அதிகாரம் வள்ளுவரால் வகுக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. தெளிவாகவே, மேலும் பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கும்.

**முயற்சியும் ஊழும் :**

உயிரின் முயற்சிக்கு ஊழ் காரணமென்ருல் முதன் முதல் பிறவிக்கு வரும் ஓரறிவுயிர்கட்கு பழவினை சிறிதுமின்மையான் அவற்றின் முயற்சிக்கு ஊழ் எப்படிக் காரணமாகும்? எப்படிப் பிறப்பீனுகின்ற வித்தாக அவா (361) விளங்குகின்றதோ, அப்படி உயிரை மலர்த்துகின்ற முனையாக முயற்சி விளங்குகிறது. முயற்சியில்லாத ஒன்றினை உயிர் உடையது என்று சொல்ல முடியாது. முயற்சி எதனையும் பெற்றுத் தரவல்லது.

முயற்சி திருவினை ஆக்கும் —(616)
ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் — 594)
எண்ணிய எண்ணியாங்கு எய்தும் -(600)
வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் —(265)

என்றெல்லாம் பல இடங்களில் முயற்சியின் வலிமையைப் பலபடப் பாராட்டுவதைக் காணலாம்.

**அறிவும் ஊழும் :**

உண்மை அறிவே மிகும் —(373) என்று கூறிய அவரே கற்றனைத்தூறும் அறிவு —(396) என்று தெளிவு செய்கிருர்.

மதிநுட்பம் நூலொடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை .. (636)

அரும்பொருள் யாதொன்றும் இல் (462) என்றெல்லாம் அறிவின் மேன்மையையும், முயற்சியால் அதனை அடைய முடியுமென்பதனையும் காட்டுகிறார். அறிவுடையார் ஊழையே மாற்றியமைக்க முடியும் என்ற குறிப்பினை, அறிவுடையார் ஆவது அறிவார் (427) எதிரதாக் காக்கும் அறிவினர் (429) போன்ற இடங்களில் குறிப்பிடுகின்றார்.

குறிப்பிற் குறிப்பு உணரும்படி செய்யும் (703) போக்கிலே வள்ளுவருக்குத் தனித்தன்மை உண்டு. இதனை மனத்தில் கொண்டு தான் மிகச் சுருக்கமான பாவமைப்பாம் குறளைத் தன் கருத்தையும், குறிப்பையும் வெளிப்படுத்தும் வடிவமாகக் கொண்டார் போலும்!

**பெருமையும் உயர்வும் :**

துன்பப்பட்டு உழைத்தால்தான் உயர முடியும். துன்பப்பட பலரும் விரும்புவதில்லை. துன்ப இன்பத்திற்கு நாம்தான் காரணம்; ஊழ் காரணமாகாது. இக்கால் ஊழின் தலையில் இப்பெருஞ்சுமையை ஏற்றிவிட்டு மடிகொண்டு அலைகின்றனர்.

'நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்? —(379) என்று சினந்து வள்ளுவர் வினவுவதைப் பாருங்கள்! உடம்பே துன்பத்திற்கு இலக்கானது என்ற கோட்பாடு உடையவர். இலக்கம் உடம்பு இடும்பைக்கு (627) என்றும் உடம்பை இடும்பைக்கே கொள்கலம் (1029) என்றும் குறிப்பிடுவார்.

ஒழுக்கமாக இருப்பதற்கும் ஊழுக்கும் தொடர்பே இல்லை. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல் (505) என்றும், பெருமையும் தன்னைத்தான் கொண்டு ஒழுகின் உண்டு (974) என்றும் பெருமைக்கு அவனவன் முயற்சியையும், ஒழுக்கத்தையும் காரணமாகக் காட்டுவதையும், ஊழைக் காரணமாக்கவில்லை என்றும் தெளிவார்களாக! மேலும் பொறி (ஊழ்) இன்மையைப் பழியாகக் கொள்ளாமல் (618) ஆள்வினை இன்மையைப் பழியாகக் காட்டினார். காட்டியதோடு, ஊழதிகாரத்தில் முற்பிறப்பு, பழவினை, அவ்வுலகம் (247) பற்றிய குறிப்புகள் அறவே இல்லை என்பதையும் ஓர்க!

**தெய்வத்தால் ஆகாது :**

அரிய என்று ஆகாத இல்லை (537) என்றவரே, தெய்வத்தால் ஆகாது எனினும் (619) என்று கூறுவானேன்? தெய்வத்தால்தான்

அனைத்தும் ஆகின்றன என்ற கருத்துடையவரா வள்ளுவர்? இல்லையே, ஞாலம் கருதினும் கைகூடும் (484) என்ற கருத்துடையவரன்றோ அவர். தெய்வத்தால் ஆகாது என்று குறிப்பிட்டதின் நோக்கம் அவர் வாழ்ந்த காலத்தில் இவ்வாறு கூறி முயற்சியை மட்டுப்படுத்தியவர்கள் பலர் வாழ்ந்தனர். கடவுள் மறுத்த பௌத்தர்கள்கூட ஊழை மறுக்கவில்லையே! அப்படி தெய்வத்தால் ஆகாது என்று கூறினாலும் மெய் வருத்தித் தாழாது உஞற்றினால் (620) அதற்குரிய பயன் உண்டு என்று கூறி மெய் முயற்சியை வலியுறுத்தினார். உலகத்துச் சூழல் துணையிருந்தால் சிறு முயற்சிகூட பெரும் பயனை நல்கும்; ஆனால் முயன்ற அளவுக்கு வரவேண்டிய பயனை அழிக்கும் கொடுங்கோன்மை ஊழுக்கு இல்லவே இல்லை.

## ஊழிற் பெருவலி யாவுள? :

ஊழ் பெருவலி உடையது என்று கொள்வதில் தவறில்லை. எனவே வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணை வலியும் தூக்கிச் செயல் (471) செய்யச் சொன்னார். இத்தகு பெருவலி உடைய ஊழைப் புறமுதுகு காட்டச் செய்து ஆள்வினையால் வெல்ல முடியுமென்றால், எது பெருவலியுடையது? ஆள்வினைதான் என்று கூறவும் வேண்டுமோ? ஊழையும் உப்பக்கம் காண்பர் (620) என்று தெளிவாகவே ஆள்வினையின் மிகப் பெருவலியைச் சுட்டினார்.

பின்னர் ஏன் 'மற்றொன்று சூழினும் தான் முந்துறும் (380) என்றார் என்று வினவலாம்! சூழ்ச்சி மட்டும் போதாது என்பதை உணர்த்தவே அவ்வாறு கூறினார். சூழ்ச்சியோடு முடிவு துணிவு எய்தல், அத்துணிவு காலத்தாழ்ச்சியில் தங்காத (671) கடும் உழைப்பும் வேண்டும்.

இன்னும் ஒருபடி மேலே போய் சூழ்ச்சி கூட வேண்டுவதில்லை என்றார். எப்பொழுது தெரியுமா? தம் குடியைத் தழாது உஞற்றுபவர்கள் சூழாமலே கூட இயல்பாகவே நல்ல முடிவை அடைவர் (1024) என்று காட்டிக் கடும் உழைப்பிற்கு முன் எந்த ஊழும் நிற்க முடியாது என்று தேற்றம் கூறினார். அத்தகையோர்க்கு தெய்வமும் மடிதற்றுத் துணை நிற்கும் (1023) என்றும் கூறினார்.

யாவுள என்று வினவி வள்ளுவரே விடை தந்த இடமும்உண்டு. பெண்ணிற் பெருந்தக்க யாவுள (54) என்று வினவி, பெண்ணே பெருமை உடைத்து (907) என்று தேற்றம் கூறி, பெண்ணிற் பெருந்தக்கதில் (1137) என்று செவ்வனிறை தந்துள்ளது போல் ஊழிற் பெருவலி யாவுள என்ற வினாவிற்கு விடை தந்தாரில்லை. தாராமையின் அதைவிடப் பெருவலியுடைய வேறொன்று உண்டு என்றும் அஃது ஆள்வினையே என்பதும் பெறப்படும்.

**வேலைக்கேற்ற கூலி இல்லை :**

உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை என்று ஊழ்வினையை நொந்து கொள்பவர்கள் பலர். இந்நிலைக்கு ஊழ்வினைதான் முழுப் பொறுப்பு என்று நம்புகின்றனர். முழுப்பயன் பெறுவதற்கு ஆள் வினை மட்டும் போதாது; அவ்வாறே அறிவு மட்டும் போதாது. இவ் விரண்டும் இணைந்து செயலாக வேண்டும் என்பதனை அறிவறிந்து ஆள்வினை (618) என்றும் ஆள்வினையும் ஆன்ற அறிவும் (1022) என்றும் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார். இரண்டுமே ஒத்த சிறப் புடையன. எனவே, அறிவிற்கு அறிவு உடைமை என்ற ஓர் அதி காரமும், ஆள்வினைக்கு ஆள்வினை உடைமை என்ற ஓர் அதிகார மும் தனித்தனியே வகுத்து ஒத்த சிறப்பினைப் புலப்படுத்தினார். இதிலே, இன்னொரு நுட்பக் குறிப்பும் உண்டு. அறிவை முதலாகக் கொண்டு அறிஞர்கள் உயர்ந்தவர்களா? ஆள்வினையை முதலாகக் கொண்ட உழைப்பாளர்கள் உயர்ந்தவர்களா? இருவருமே ஒத்த தகுதியுடையவர்கள் என்ற செய்தியைக் குறிப்பாகப் புலப்படுத்து கிறார். ஆள்வினைக்கும் அறிவிற்கும் வள்ளுவர் அளித்திருக்கிற உயர்வு மிகப் பெரிது. இவ்விரண்டின் இணைப்பு உலகத்தை ஆக்க வல்லது; உயர்த்தவல்லது; மாந்த வினத்தை வாழ்வாங்கு வாழ் விக்க வல்லது; மண்ணில் விண்ணை உருவாக்க வல்லது என்றெல் லாம் கருதினார்.

**முடிவுரை :**

இதுகாறும் கூறியவற்றால் ஊழை வள்ளுவர் குறிப்பிட்டதன் நோக்கம், அதனை உடைத்தெறியவும் கடக்கவுமன்றி அதை நம்பிச் சோம்பேறியாக ஆகவோ, வாழ்வில் தோல்வி அடையவோ அன்று என்பதனையும், ஆள்வினையோடு ஆன்ற அறிவு இணைகின்றபொழுது அதற்கு எதிராக எதுவும் நிற்க இயலாது என்றும், தெய்வமும் துணை நிற்கும் என்றும் அரிய என்று ஆகாது இல்லை என்றும் அறிகிறோம்.

ஆள்வினையும் ஆன்ற அறிவும்
சூழட்டும்! ஊழ்வினை ஓடட்டும்!

---

## அன்பர்கள் கவனிக்க

**பொறுப்பாசிரியர்** அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், **காரி, ஞாயிறு** ஆகிய நாள்களில் மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். வெளியூர் அன்பர்கள் முன்கூட்டியே எழுதி விடை பெற்றுக் கொண்டு வர வேண்டும். **—அமைச்சர்.**

# கனிச்சாறு - ஆங்கில மொழிபெயர்ப்பு

**KANICHARU** **ENGLISH VERSION**

மூலம் : பெருஞ்சித்திரனார்

பெயர்ப்பு :
சி. நா. செந்தமிழ், க. மு.

### 1. "எம் வாழ்க்கை!"

"முன்புதை உண்டஎம்
முத்தமிழ்ச் சிறப்பினை
மன்பதைக் குணர்த்தல்என்
மண்ணுயிர் வாழ்க்கை!"

**"MY LIFE"**

"The chief goal of my
Earthly life is to make
The world to feel
The Perished glory and greatness
Of ancient Three Tamizh!

### 2. வழி பிறிதுண்டோ?

மொழிநலம் உணரார்; மக்கள்
முழுநலங் கருதார்; தீய
பழிமிகத் துணிவார்; ஈட்டம்
பதுக்குவார்; உரையால் ஏய்ப்பார்;
அழிவழக் கிடுவார்; இன்னோர்
அமைச்சரென் றமர்வா ராகில்
வழி பிறிதுண்டோ? நாடு
வளம்பெறல் குதிரைக் கொம்பே!

**"IS THERE ANY WAY"**

Don't feel the welfare of the Language
And people in full; Be brave
And bold for evilshame; To hide
The earning; To deceive
Through speech! To produce
False case; If. Such a man
Becomes a minister, Is there
Any way to live? And this country's
Growth should be as a horse's horn

---

பின்குறிப்பு : இம்மொழிபெயர்ப்புகளைப் பற்றி அன்பர்களின் கருத்துகள் வரவேற்கப்பெறுகின்றன.

# தமிழப் பேரரசு!

—சி. பா. ஆதித்தனர்.

## 5. நாமும் ஒரு வல்லரசு ஆகிறோம் வாரீர்!

'இந்தியா ஒரு பெரிய நாடு; ஆகையால் அதில் இருப்பதில் பயன் உண்டு' என்று சிலர் சொல்லுகிருர்கள். ஒரு பெரிய நாட்டிற்கு அடிமையாய இருப்பதை விட, ஒரு சிறிய நாட்டில் தன்னுரிமையுடன் இருப்பதே சிறந்தது.

பார்க்கப்போனுல், தமிழ்நாடு ஒரு "சிறிய நாடு" என்று சொல்லிவிட முடியாது.

400 இலக்கம் தமிழர்கள் வாழுகிற நம் "தமிழகம்" தனி உரிமை நாடாக இயங்குமானுல், அஃது எகிப்து நாட்டைவிடப் பெரிதாக இருக்கும். 2 கோடி மக்கள் தொகை உள்ள எகிப்து நாடு, பிரிட்டன்—பிரான்சு முதலிய நாடுகளை எதிர்த்து அடித்தது நினைவு இருக்கலாம். அது போன்ற நாடாக தமிழ்நாடு இருந்தால் போதாதா?

### குண்டுச் சட்டிக்குள் குதிரை

"உரிமைத் தமிழ் நாடு" என்பது "குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல்" இருக்கிறது என்று அமைச்சர் கக்கன் சொன்னுர்.o

உலகத்தில் எத்தனை நாடுகள் உரிமையுடன் இருக்கின்றன என்பதும், அந்த நாடுகளில் எத்தனை நாடுகள் தமிழ்நாட்டை விடச் சிறியவை என்பதும் கக்கனுருக்குத தெரியுமா? தமிழ்நாட்டை விடச் சிறியவையாக 74 நாடுகள் முழு உரிமையுடன் வாழுகின்றன என்பதும, அந்த நாடுகள் எல்லாம் உலக நாடுகள் அவையில் (ஐ. நா. சபை) உறுப்பாண்மை உடையனவாயுள்ளன என்பதும் அமைச்சருக்குத் தெரிந்திருந்தால், அவர் அப்படிப் பேசி யிருக்க மாட்டார்.

தமிழ்நாடு குண்டுச்சட்டி போல் சின்னதாக இருந்தால் அதை விடச் சிறியதாக இன்னும் 74 நாடுகள் இருக்கின்றனவே! அவை எல்லாம் குண்டுச் சட்டிக்கும் சிறியவை என்று ஆகின்றன அல்லவா? அவை, குண்டுச் சட்டியை விடச் சின்னதான தேநீர்க் கோப்பைக்குள் குதிரை ஓட்டுகின்றனவே!

---

oசேலத்தில் நடந்த கூட்டத்தில் அமைச்சர் கக்கன் பேசுகையில், மேற் கண்டவாறு சொன்னுர்.

**சொந்த ஆட்சி**

உலக நாடுகள் சவையான ஐக்கிய நாடுகள் சவையில் மொத்தம் 84 நாடுகள் இருக்கின்றன. அவற்றிற்குச் சொந்தக் கொடியும், சொந்த ஆட்சியும் இருக்கின்றன. அண்மையில் உலக நாடுகள் அவையில் சேர்ந்த மலாயா நாட்டில் 60 இலக்கம் மக்கள் வாழ்கிறார்கள். 1957-ஆம் ஆண்டு விடுதலை அடைந்த 'கானு" என்ற ஆப்பிரிக்க நீகிரோ நாட்டில் 32 இலக்கம் பேர்தான் இருக்கிறார்கள். ஆனாலும், அந்த நாடுகளில் மக்கள் கண்ணியமாக, மானத்துடன் வாழ்க்கை நடத்துகிறார்கள்.

"கானு" நாட்டில் இருந்து வருகிற தனிக் கறுப்பர்களுக்குத் தில்லியிலே விருந்து நடக்கிறது. ஆனால் தமிழ் மக்கள் என்றால், 'கறுப்பர்கள்" என்று வடநாட்டார் இழிவாகப் பேசுகிறார்கள். 400 இலக்கம் பேர் கொண்ட தமிழ் மக்களுக்கு இந்த அவமதிப்பு ஏன்? "கானு" நாட்டு "நீகிரோ"க்களுக்குத் தனி அரசு இருக்கிறது! ஆனால், தமிழ் மக்களுக்குத் தனி அரசு இல்லை! இதுதான் காரணம்!

இன்று இலங்கையில் உள்ள சிங்களவன், தமிழ் மக்களைக் "கள்ளத்தோணி" என்று ஏசுகிறான்! "ஓடிப் போ" என்று காலால் எட்டி உதைக்கிறான்! அத்தனையையும் தமிழர்கள் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது! தமிழ் மக்கள் 400 இலக்கம் பேர் இருந்தும், "தனி அரசு' என்ற தகுதி இல்லாத காரணத்தால், இலங்கையில் உள்ள 65 இலக்கம் சிங்களர்கள் ஏளனம் செய்கிறார்கள்! சிங்களர்களுக்கு அரிமா (சிங்க)க் கொடியும், தனி அரசும் இருக்கின்றன; தமிழ்நாட்டுக்கும் தனி அரசு இருந்தால், இலங்கையில் இருந்து தமிழ் மக்களை விரட்டி யடிக்கும் நிலைமை ஏற்படுமா?

**அடிமை வாழ்வின் அவல நிலை**

நாம், தன்னுரிமை அற்று அடிமைப்பட்டுக் கிடக்கிறோம் என்பதைத் தமிழ் மக்கள் போதிய அளவுக்கு உணர்ந்து கொள்ளவில்லை. அடிமைத் தன்மையின் கொடுமை என்னவென்றால், அடிமையாக வாழுகிற மக்கள், அவர்களுடைய நிலைமையைச் 'சட்'டென்று உணராமல் இருக்கச் செய்து விடுகிறது என்பதுதான்! இது தமிழ் நாட்டின் வரலாற்றில் நாம் கண்ட உண்மை. "அயர்லாந்து" நாட்டின் வரலாற்றிலும் இந்த உண்மையைக் காணலாம்.

## அயர்லாந்து

அயர்லாந்து நாட்டு வரலாற்றை ஊன்றிப் படித்தால், அந்த நாட்டின் வரலாற்றுக்கும், நமது நாட்டு வரலாற்றுக்கும் உள்ள ஒற்றுமைகள் விளங்கும். தமிழ்நாடு இந்தியா நாட்டின் ஒருபகுதியாக இப்போது இருப்பதுபோல், அயர்லாந்து நாடு பிரிட்டன்

நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது தில்லிப் பாராளுமன்றத் துக்குத் தமிழ்நாட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் போவது போல், அயர்லாந்து நாட்டினர் 40 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரிட்டிசு "பாராளுமன்றத்தில்" அமர்ந்து இருந்தார்கள். அப்படி இருந்தும், அயர்லாந்து தேசத் தலைவர் "டிவேலரா' என்பவர், உண்மை யிலேயே அயர்லாந்து அடிமைப்பட்டுக் கிடக்கிறது என்பதை அந்த நாட்டு மக்கள் உணரச் செய்தார்.

அரசர்கள் ஆண்ட காலத்தில் ஒரு பேரரசு, ஒரு சிற்றரசை அடக்கி ஆண்டால், அந்தச் சிற்றரசு ஓர் அடிமை நாடாகக் கருதப் பட்டது. குடியரசு ஆட்சி முறை பரவியிருக்கிற இந்தக் காலத்தி லும் ஆண்டான் என்பதும் அடிமை என்பதும் உண்டு! ஆனால், பேரரசு – சிற்றரசு என்ற முறையில் அல்ல. பெரும்பான்மை —சிறு பான்மை என்ற முறையில் அடிமைத் தன்மை உருவாகிறது!

தில்லிப் பாராளுமன்றத்தில 40 பேர் தமிழர்களும் 460 பேர் தமிழர் அல்லாதவரும் இருப்பதால், 'ஒப்போலை உரிமை இருந்த போதிலும், சிறுபான்மையினரான தமிழருக்கு அடிமை நிலை ஏற் படுகிறது.

முப்பது இலக்கம் மக்கள் கொண்ட அயர்லாந்துக்காரர்கள், பிரிட்டன் தேசத்துடன் சேர்ந்திருந்த காலத்தில், அவர்களுடைய தாய் மொழி (ஐரிசு மொழி) சீர்குலைந்து, அயர்லாந்துக்காரர்கள் கூட அந்த மொழியில் பேச வெட்கப்படும் நிலையில் (இன்று தமிழ் இருக்கும் நிலையில்), இருந்தது! இன்னும் கொஞ்ச காலத்தில் "ஐரிசு" மொழி அழிந்து போகுமோ என்று அஞ்சும் நிலைமை ஏற்பட்டது.

ஆனால், அயர்லாந்துக்காரர்கள் அவர்களுக்குத் தனி நாடு வேண்டும் என்று கிளர்ச்சி செய்து, விடுதலை அடைந்தார்கள். தனி அரசு ஏற்பட்டவுடன், அயர்லாந்து அரசு தாய் மொழியான "ஐரிசு" மொழியில் நடந்தது. சட்டங்கள் அந்த மொழியில் இயற்றப்பட்டன. படிப்படியாக அந்த மொழியின் நிலைமை உயர் வடைந்தது; உலகத்தில் அயர்லாந்துக்காரர்களுக்கு மதிப்பு ஏற்பட்டது.

இதேபோல, தமிழர்களும், 'விடுதலைத் தமிழ்நாடு' அடைந்தால் தான், தமிழ் மக்களும்—தமிழ் மொழியும்—தமிழ்நாடும் உலகத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

## 6. அரசு எவ்வழி, மொழி அவ்வழி!

தமிழ்நாட்டில் உள்ள அஞ்சல் தொலைவரி நிலையங்கள், எந்த மொழியில் செயல்படவேண்டும்? இந்தக் கேள்வியைக் கேட்டால்,

நீங்கள் உறுதியாகத் "தமிழில் செயல்படவேண்டும்" என்றுதான் சொல்லுவீர்கள்! இதைப் போலவே இன்னும் சில கேள்விகளுக்கு விடை சொல்லுங்கள் .—

**தமிழ்! தமிழ்! தமிழ்!**

தமிழ்நாட்டில் உள்ள கப்பல் துறைமுகங்களில், எந்த மொழியில் வேலை நடக்க வேண்டும்?

விடை : "தமிழில்"

தமிழ்நாட்டில் புழங்குகிற நாணயங்கள், எந்த மொழியில் இருக்க வேண்டும்? உருபா, அணு ("நயாபைசா") இவற்றில் எல்லாம், எந்த மொழி எழுதப்பட வேண்டும்?

விடை : "தமிழ்மொழி"

தமிழ்நாட்டில் செலாவாணி ஆகிற உருபாத் தாள்களில் எல்லாம், எந்த மொழி அச்சிடப்பட வேண்டும்?

விடை : "தமிழ்"

தமிழ்நாட்டில் ஓடுகிற தொடர்வண்டி, கப்பல், வானூர்தி இவற்றை எல்லாம் யார் ஓட்டவேண்டும்? அவற்றில் நடக்கிற வேலைகள், எந்த மொழியில் நடைபெற வேண்டும்?

விடை : "தமிழர்கள் ஓட்டவேண்டும்! தமிழ் மொழியில் நடைபெறவேண்டும்!"

தமிழ்நாட்டில் ஒலிபரப்புகிற வானொலி நிலையங்கள் எந்த மொழியில் பேசவேண்டும்?

விடை : "தமிழில்!"

தமிழ்நாட்டு அரசு தில்லிக்குக் கடிதம் எழுதுவது, எந்த மொழியில் எழுத வேண்டும்?

விடை : "தமிழில்"

தமிழ்நாட்டின் தூதுவர்களாக, வெளிநாடுகளுக்கு யார் அனுப்பப்பட வேண்டும்?

விடை : "தமிழர்களே தமிழ்நாட்டின் தூதுவர்களாகப் போக வேண்டும. அவர்கள் தமிழ் மொழியை உலகமெல்லாம் பரப்ப வேண்டும்."

மேற்சொன்ன வேலைகள் எல்லாம் தமிழில் நடந்தால், அப்படி நடக்கிற நாடு "உரிமைத் தமிழ்நாடு"தானே!

ஆகையால் "தமிழ்" என்று சொல்லிக்கொண்டே போனால்' இறுதியில் "விடுதலை" என்ற கட்டத்துக்கு வந்து விடுகிறோம்.

விடுதலை பெற்ற தமிழ்நாட்டில், தமிழ் ஆட்சி மொழியாகவும் பொது மொழியாகவும் இருக்கும்.

**பித்தலாட்டம்!**

பள்ளிக்கூடத்திலும், சட்டசபையிலும், நயமன்றங்களிலும், தமிழ் மொழியைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று எல்லோரும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஆகையால், அதைப்பற்றி இப்போது கேள்வி எழவில்லை. ஆனால், அஞ்சல் நிலையங்கள், தொடர்வண்டி நிலையங்கள், அரசு வைப்பகங்கள், நாணயங்கள் முதலியவற்றில் எந்த மொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி,

இந்த நிலையில், தமிழ்நாட்டிலே இப்போது ஆட்சி மொழியாக தமிழ் வந்துவிட்டது என்று சொல்லுவது பித்தலாட்டம்! தமிழ் ஆர்வம் கொண்ட மக்களை ஏமாற்றுவதற்காகச் சொல்லுகிற சொல் அது. ஆட்சி மொழியாகத் தமிழ் ஆகவில்லை என்பதற்குச் சில காரணங்களை கீழே காட்டியிருக்கிறோம் :

**அரசு இலச்சினையில் இந்தி!**

1. தமிழ்நாட்டின் ஆட்சி மொழி தமிழ் என்பது உண்மையானால்,சென்னை அரசின் "இலச்சினையில்" ஏன் இந்தி மொழி காணப்படுகிறது? சென்னை அரசின் "இலச்சினையில்' ஒரு கோபுரமும், ஒரு "அசோகத் தூணும்" வரையப்பட்டு, அதற்குக் கீழே "சத்திய மேவ சயதே" என்று இந்தியில் எழுதப்பட்டு இருக்கிறது. ஆட்சி மொழி தமிழ் மொழியாக இருந்தால் அந்தச் சொற்கள் "உண்மையே வெற்றிதரும்" என்று தமிழில் எழுதப்பட்டு இருக்கும் அல்லவா?

**நாணயத்தில் இந்தி!**

2. ஆட்சி மொழி அல்லது அரசு மொழி நாணயத்தில் முதன்மையாக இருக்கவேண்டும். 100 ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைய ஆட்சியைப் பற்றி ஆராய்ச்சி செய்வதாக இருந்தால், இப்போது புழங்குகிற நாணயங்களையே ஆராய்ச்சியாளர்கள் முகாமையாகப் பார்க்க நேரிடும்.

தமிழ்நாட்டில் புழங்குகிற எந்த நாணயத்திலாவது. தமிழ்ச் சொல் உண்டா? ஒரு "நயா பைசா"வில் இருந்து 2 நயா பைசா, 5 நயா பைசா, 10 நயா சைா, கால் உருபா, அரை உருபா, அல்லது ஓர் உருபா — எதைப் பார்த்தாலும் எல்லாம் இந்தி மொழியில்தான் இருக்கிறது! மருந்துக்குக் கூட தமிழ் இல்லை! "நயா பைசா" என்ற சொல் கூட இந்தி!

இவ்வாறு இருக்கும்போது, தமிழ்நாட்டில் தமிழ் மொழி ஆட்சி மொழி ஆகிவிட்டது என்பது ஏமாற்று உரை அல்லவா?

**அஞ்சல் தலையில் இந்தி!**

3. நாணயங்களைப் போலவே அஞ்சல் தலைகளும் முக்கிய மானவை தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படுகிற அஞ்சல் தலைகள் எல்லாவற்றிலும் இந்தி எழுத்துகளே காணப்படுகின்றன. தமிழ் நாட்டில், தமிழர்கள் வாழுகிற ஊர்களுக்குக் கடிதம் எழுத வேண்டு மானாலும், அஞ்சல் தலை என்று அஞ்சல் அலுவலகங்களில் கேட்டு வாங்கும்போது அங்கே இந்தி எழுத்துள்ள அஞ்சல் தலை அல்லவா கொடுக்கப்படுகிறது! எந்த அஞ்சல் தலையிலாவது தமிழ் எழுத்து உண்டா? கிடையாதே!

**நாட்டுப்பண், இந்தி!**

4. மேலும், ஒரு நாட்டின் ஆட்சிக்கு அறிகுறியாகப் பாடப் படுவது 'நாட்டுப்பண்'' என்கிற நாட்டுப் பாடல் தமிழ்நாட்டின் எந்த மொழியில் இருக்கிறது? தமிழ் மொழியிலா? ''சனகணமன'' என்றால் அது தமிழா? ஆட்சிக்கு அடையாளமான ''நாட்டுப் பாடல்'' என்பது வடமொழியில் இருக்கும்போது, தமிழை எப்படி ஆட்சி மொழி என்று சொல்வது?

முன்பு ஆங்கிலேயர்கள் தமிழ்நாட்டை ஆண்டபோது, ஆங் கிலம் ஆட்சி மொழியாக இருந்தது. இப்போது இந்தி, உண்மை யான ஆட்சி மொழியாக இருக்கிறது. இதற்குக் காரணம், இந்தி மொழிக்காரர்களான தில்லிக்காரர்களின் வல்லாண்மையில் தமிழ் நாடு இருக்கிறது என்பதுதான்!

தமிழ், ஆட்சி மொழி ஆகிவிட்டது என்று எப்போது சொல்ல முடியும் என்றால், இலச்சினையில் தமிழ் எழுத்து பொறிக்கப்பட்டால் சொல்ல முடியும்!

அஞ்சல் தலை தமிழில் இருந்தால் சொல்ல முடியும்!

நாணயத்தில் தமிழ் இருந்தால் சொல்ல முடியும்!

நாட்டுப்பண், தமிழாக இருந்தால் சொல்ல முடியும்!

தில்லியாருக்கும், பிற நாடுகளுக்கும் தமிழ்நாட்டு அரசினர் எழுதுகிற கடிதங்கள் தமிழ் மொழியில் இருந்தால் சொல்ல முடியும்!

தமிழ்நாட்டுப் படை வீரர்களுக்குக் கட்டளை இடுவதெல்லாம் தமிழில் மொழியில் இருந்தால், தமிழை ஆட்சி மொழி என்று சொல்ல முடியும்!

# முப்பால் பாகுபாடு

—புலவர். பொன். முகிலன்.

குமரிக் கண்டத் தமிழர் கண்ட வாழ்வமைப்பின் தொகு மொத்தப் பாகுபாடு அகம் புறம் என்னும் இரண்டே. இதனை இன்பம், பொருள், அறம் என வகுத்துரைப்பதும் தமிழ் மரபே. மாற்றினத் தாரின் வரலாறும் அவர்தம் பண்படாத தன்மைகளாலும் அறத்தின் திறம் மாறுபட்டுத் தாழ்நிலை அடைந்தது. இதனை நீக்கவே, வள்ளுவர் அதுவரை இருந்த இன்பம், பொருள், அறம் என்னும் வாழ்வமைப்புப் பாகுபாட்டை அறம், பொருள், இன்பம் என மாற்றி யமைத்தார். வீடு பற்றிய கூற்று பழந்தமிழ் இலக்கிய இலக்கணங் களில் வாழ்வமைப்புப் பாகுபாட்டில் ஒன்ருகவோ, பிறவி நோக்க மாகவோ கூறப்படவில்லை. இடைக்காலத்து எழுந்த நூல்களே அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயன் என நுவன்றன.

வீடு பற்றிய நான்காம் பகுப்பு ஓரினத்தார் நன்கு ஏமாற்றிப் பிழைப்பதற்காகப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டதேயன்றி, யாரும் அறிந்தது மன்று, கண்டதுமன்று. ஆயின் முப்பகுப்போ யாவராலும், இவ்வுலகில், அறிந்து உணர்ந்து—தெளிந்து துய்த் தது —துய்க்கிறது —துய்ப்பது. வள்ளுவரும் 'மேலுலகம் இல்லெனி னும்' என்னும் கூற்ருல் வீடு பற்றிய கருத்தைப் பொருட்படுத் தாமை புலப்படுகிறது. புறநானூறு, அறம்புரிவது மேலுலகம் பெறுவதற்காக அன்று என்பதையும், அவ்வாறு செய்யின் அது வணிகமாகும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

அவ்வாருயின் அறம் புரிவது எதற்கு எனின், அது சான்ருேர் காட்டிய வழி, அதனுல் எல்லோருக்கும் எப்போதும் நன்மை விளையும் என்பதனுல் அறம் செய்ய வேண்டும் எனக் கூறுகிறது. எனவே, அறம் என்னும் நற்செயல் புரிவது எல்லா மக்களின் பொதுநலம் பற்றியதேயன்றி, எந்த ஒரு மாந்தனின் தனி நலத் திற்கு மன்று. தமிழர் வகுத்த அறம் பொருள் இன்பம் என்னும்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

**விடுதலை ஏற்பட்டால்?**

இவை எல்லாம் எப்போது தமிழாக ஆகும் என்ருல், தமிழ்நாடு தில்லியின் வல்லாண்மையில் இருந்து விடுபட்டுத் தன்னுட்சி நாடாக ஆனுல் ஆகும்! அப்போதுதான் தமிழ் உண்மையிலேயே ஆட்சி மொழி ஆகும்!

தமிழ்நாடு, உரிமை நாடு ஆகவேண்டும் என்ருல் "தமிழருக்கு நிகரில்லை" என்ற நம்பிக்கை தமிழரிடம் பிறக்கவேண்டும்! "தமிழ் மொழி பெரிது! தமிழ்நாடு பெரிது" என்ற உணர்ச்சி ஓங்க வேண்டும்!

(தொடரும்)

முப்பால் பாகுபாடு உச்ச உயர் பண்பாட்டின் ஒழுகலாறுகளை உடையது. எவருக்கும் எந்நிலையிலும் தீங்கு தராத இயல்புடையது. எல்லோருக்கும் நன்மை பயப்பதையே நோக்கமாகக் கொண்டது.

வடமொழியாளரிடமும் முப்பாகுபாடு உண்டு. ஆயின், அது தமிழரின் பாகுபாட்டிற்கு முற்றிலும் நேர்மாறானது. எவ்வாறெனின் அவர்தம் அறம் என்பது வெறுப்பை அடிப்படையாகக் கொண்ட துறவைக் குறிக்கும். பொருள் என்பது சூழ்ச்சியை, ஏமாற்றை, இரண்டகத்தை, வருணப் பாகுபாட்டை, தீண்டாமையை, பிறவியடிப் படையில் வரும் ஏற்றத்தாழ்வான சீரற்ற நேர்மையற்ற நயன்மை (நீதி)யை, தனி வல்லாண்மையை, சுரண்டலைக் குறிக்கும். அவர்தம் இன்பம் என்பது உடற்பசியை மட்டுமே நோக்கமாக உடையது. வலிந்து பற்றுதல் இழிந்த செயலன்று என்று வழக்காடுவது உறவு முறை நோக்காமல் விலங்கினம் போல விருப்பம் நிறை வேற்றலே வியன் கலை என விளக்கம் பேசுவது. பிள்ளைப் பேற்றிற்கென எப்படி இயங்கினும் ஏற்றத்தக்கதென ஏற்ற முறைப்பது. ஆயின் தமிழ் மரபிலோ அறம் அன்பையும்—அறிவையும், பொருள் உயர் ஒழுக்கத்தையும்—ஒப்புரவையும், இன்பம் மாறு விருப்பத்தையும்—ஒத்த உணர்வையும் கொண்டது.

இவ்வண்ணம் எவ்வகையில் நோக்கினும் தமிழ்ப் பாகுபாடு மலைபோல் உயர்ந்த மாண்புடையது. வடமொழிப் பாகுபாடோ மடுப்போல் படுதாழ்ச்சியுடைய இருட்டுலகாய் எவரையும் மருட்டுவது. இதற்கு உண்மை நிலைகளை உணர்க. மாற்றி மறைத்துப் போற்றிக் கூறும் மடமையுரை கேட்டு மயங்கற்க. புன்மை யொழித்து நன்மை காண வாய்மை கொண்ட நடுநிலை ஆய்வைப் பேணுக.

---

# புதுப்பாடல்

—க. அ. ஒளியவன், கொடுமுடி.

‘உரைவீச்சை’ப் புதுப்பாடல் எனப்புனைந்தே!
உளறுகின்றார்; இதுபாடல் இனமே யன்று!

‘உரைவீச்சை’ப் புதுப்பாடல் என்றுகொண்டால்
உரைநடையும் புதுப்பாடல் என்றே சொல்வர்.

தெருக்கழுதை வாய்விட்டுச் சிரிக்கும்! இந்தச்
செய்தியினை வெளிப்படவே சொல்ல வேண்டாம்!

கருச்சிதைவைப் போய்ப்பிள்ளை என்பவரார்?
கருத்துடையீர் இதுபற்றிச் சிந்திப்பீரே!

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்

கலவிக் கட்டுப்பாடு, முழுக்க முழுக்க பெண்வாடையே இல்லாதிருக்க வேண்டுமென்பதில்லை. அதனால் கேடே விளையும். புணர்ச்சியின் போது கட்டுப்பாட்டைக் கைக்கொள்ளலாம். கலவிக் கிளர்ச்சி உண்டாக விடாதபடியே புணர்ச்சி நேரத்தை நீட்டிக்கொண்டே செல்லலாம். முடிவில் புணரும் பெண்ணுக்கும் கலவிக் கிளர்ச்சி உண்டாகாதபடி செய்யலாம். இது ''கலவி ஒதுக்குமுறை'' எனப்படும். இம்முறையால் ஒளிநீர் இழப்பு தடுக்கப்படுகிறது. புணர்ச்சி இன்பம் ஓரளவு கிடைக்கின்றது குடும்பக் கட்டுப்பாடுக்கு இஃது ஒரு வழியாகும். இதிலிருந்து மாந்தன் பழக்கத்தினால் ஒளிநீர் வெளியேறுவதைக் கட்டுப்படுத்த முடியும் எனப் பெறப்படுகின்றது ஆகவே விரைவு ஒளிநீர் வீழ்கை ஓர் அளவு பழக்கக் கோளாறால் உண்டாவது என்பது உறுதியாகிறது. கலவி ஒதுக்கு முறையைப் பல நாட்கள் ஒத்திகைக்குப் பின்தான் கைக்கொள்ள முடியும்.

முதலில் ஆணும் பெண்ணும் அமைதி அடைகின்றனர். தங்கள் மனத்தை, மெய்ப்பொருளை ஆராய்வதில் நாட்டுகின்றனர் அவர்கள் எண்ணம் விரிந்து விரிந்து மேல்நோக்கிச் செல்கின்றது. தங்கள் உடல் உணர்ச்சியை அடக்கி உயிர் உணர்ச்சியை வளர்கின்றனர். புணர்வதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பு கூட மெய்ப்பொருள் நூல்களையும், மெய்யறிவு நூல்களையும் ஆராய்கின்றனர். இருவரும் உடல் களைப்போ, உள்ளக் களைப்போ இல்லாதபடி பார்த்துக் கொள்கின்றனர். அமைதியும், எண்ண ஆற்றலுந்தான் இச்சேர்க்கையில் முதல் இடத்தைப் பெறுகின்றன. காமக் கிளர்ச்சி தூண்டப்பட்டுக் கட்டுக்கடங்காத நிலை உண்டாகி, அதனால் சில அசைவுகள் ஏற்பட்டுக் கலவிக் கிளர்ச்சி உண்டாகாதபடி மிக மிக உன்னிப்பாக பார்த்துக் கொள்ளப்படுகிறது. விரைவு என்ற பேச்சே அங்கில்லை. இருவரின் கலவி உறுப்புகளின் சேர்க்கை அஃதாவது புணர்ச்சி ஒரு மணி நேரம் வரை நீடிக்கிறது. புணர்ச்சியினபோது, ஆணுக்கு எப்பொழுதாவது ஒளிநீர் வெளியேறப் போகிறது போல் தோன்றின், எல்லா வகையான அசைவுகளும் நிறுத்தப்பட்டு, மனத்தைக் கலவித் தொடர்பற்ற, மற்றவற்றில் செலுத்தி, விந்து வெளியேறுவது தடுக்கப்படுகிறது இதே போன்று பழக்கப்படுத்தி வந்தால் ஓர் ஆணுடைய கலவிக் கிளர்ச்சியும், தான் புணரும் பெண்ணின் கலவிக் கிளர்ச்சியும் ஒரே நேரத்தில் உண்டாகும்படி செய்து இருவரும் ஒரே நேரத்தில் உச்ச நிலையை அடையச் செய்து, புணர்ச்சியின் முழு இன்பத்தையும் பெறலாம். கலவி ஒதுக்குமுறையின் அடிப்படைக் கொள்கை மிக எளிது புணர்வதற்கு முன்

உடலும் உள்ளமும் அமைதியாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும். களைப்போ கூடாது. புணரும் பொழுது புணர்கிறேம் என்ற நினைப்பையே விட்டுவிட வேண்டும். காமத்தைக் கிளரும் நூல்களையோ, பேச்சையோ தள்ள வேண்டும. பெண்ணை மிகுதி யாகச் சீராட்டக் கூடாது. புணர்ச்சியின்போது விரைவையும், விரைவு அசைவுகளையும் நீக்கவேண்டும். விந்து வெளியேறும் போல் தோன்றிஞல் மனத்தை வேறு இடத்தில் நிறுத்தவேண்டும். பொது மாந்தன் இம் முறையை நீடித்த நேரம் புணரக் கைக்கொள் கின்ருனே யன்றி, ஒளிநீரே வெளியேருதிருக்கக் கைக்கொள்வ தில்லை. நீடித்த நேரம் புணர இப் முறையைக் கைக்கொளின் இம் முறையால் கேடு உண்டாவதில்லை. ஆனுல் எப்பொழுதுமே ஒளி நீர் வெளியேருதிருக்க இம் முறையைக் கைக்கொண்டால் முடிவில் குறைவான அல்லது முழு அலித்தன்மை உண்டாகிறது. உடல் சோர்வும் மனச் சோர்வும் ஏற்படுவதுடன் தொழில் கேடும், உறுப்புக் கேடும் நிகழ்கின்றன. புராசுடேட் சுரப்பியிலும் ஒளி நீர்ப் பையிலும் குருதித்தேக்கம் ஏற்பட்டு அவை வீங்கி நீள்கின்றன. இவற்றில் சுரந்த நீர்கள் சிலர் நினைப்பது போன்று, உறிஞ்சப்பட்டுக் குருதி ஓட்டத்திற்குள் செலுத்தப்படுவதில்லை. சுரந்த நீர்கள் அங்கேயே தங்குகின்றன. அவ்விடங்கள் நுண்ணங்கள் பெருகி வளர ஏற்ற விளை நிலங்களாகின்றன. அந்த நுண்ணங்கள் அவ்விடங்களையும் கெடுத்து, உடல் முழுவதையும் கெடுக்கின்றன.

கலவி ஒதுக்குமுறையால் புராசுடேட்டைச் சுற்றி உள்ள தசை களுக்குக் கெடுதல் உண்டாகிறது. ஒளிநீர் வெளியே தள்ளப்படுவ தற்காக இத்தசைகள் புணர்ச்சியின்போது எப்பொழுது தாங்கள் வேலை செய்ய அழைக்கப்படுவோமென எதிர்பார்த்துக் காத்திருக் கின்றன. இக் கலவி ஒதுக்கு முறையால் ஒளிநீர் வெளியே தள்ளப் படாது அடக்கப்படுகிறது. அதனுல் இத்தசைகள் வேலை அற்றுப் போகின்றன. ஆகவே நச்சுப் பொருள்கள் இத்தசைகளில் சேமிக்கப் படுகின்றன. அந்த நச்சுப் பொருள்களால் தசைகள் சுருங்கு கின்றன. இயற்கையாக இந்த நச்சுப் பொருள்கள் தசைகள் வேலை செய்யும்பொழுது, அதாவது ஒளிநீர் வெளியே தள்ளப்படும்பொழுது, அந்த நச்சுப் பொருள்களும் வெளியே தள்ளப்படுகின்றன. இந்த நச்சுப் பொருள்கள் தசைகளில் சேமிக்கப்பட்டால், தசைகளை நீட்டி, அவற்றின் சுருங்கும் தன்மையை அழிக்கின்றன: சுரப்பிகளில் உள்ள நரம்பு நுனிகளைக் கொல்கின்றன. முடிவில் புராசுடேட் சுரப்பியை வீங்க வைத்து அங்கு வந்தடைகின்றன. கிளர்ச்சிகள் புராசுடேட் சுரப்பியில் எவ்வகை மாற்றங்களையும் செய்ய முடிவ தில்லை. அஃதாவது அங்கு வந்தடையும் கிளர்ச்சிகளுக்கு ஏற்ப, புராசுடேட் சுரப்பியில், மாற்றங்கள் உண்டாவதில்லை. இஃதே அலித்தன்மையின் உண்மை நிலையாகும். (தொடரும்)

யிடுகின்றது. நான் கண்ட ஓர் எடுத்துக்காட்டு; திரு. தா. பாண்டியனாரின் உரைகள் சில தென்மொழியில் வெளிவந்தமை கண்டு, நான் அவரைப் பாவலரேறுவிற்கு நன்கு பழக்கமானவர் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் ஈரோட்டில் நடைபெற்ற மாணவர் பெருமன்ற இந்தி யெதிர்ப்பு மாநாட்டில் அறிமுகமாகிக் கொண்டதைக் கண்டு வியந்தேன். பிறகு, ''உங்களுக்கு இவரை முதலிலேயே தெரியாதா?'' என்று கேட்டேன். 'இல்லை' யென்றார். 'தென்மொழியில் அவர் உரைகள் வெளிவந்தனவே?' என்றேன். 'யாரோ அவற்றைக் கொடுத்து, அவை நம் கருத்தை ஒத்தன' என்றனர். வெளியிட்டேன்' என்றார். ஐயாவைப் பார்த்து எனக்கு இரக்கமேற்பட்டது. தம்மைச் சார்ந்தவர் கருத்து புன்மையாயினும் வெளியிட்டுப் பெருமைப்படுத்துவதும், ஆகாதவராயின் அவரை மூடி மறைப்பதும் ஆன இன்றைய தாளிகை உலகம், இவரின் அறிவுக்காகவே ஆளை மதிக்குந்தன்மையை விளங்கிக் கொள்ளுமா?'' என்று மலைத்துப் போனேன்.

பெருஞ்சித்திரனார் பொதுத் தொண்டில் எதிர்ப்படும் உண்மைகளை எல்லோர்க்கும் பயன்படும் வகையில் வெளிப்படையாக ஆராய்கிறார். இல்லெனில் 'நமக்கு வந்த மடல்கள்' பகுதியை வெளியிடுவதின் நுட்பத்தை விளங்கிக் கொள்ளல் அரிது.

தென்மொழியில் தொய்வாமே! அவர்தம் மன உணர்வில் ஏற்பட்டுள்ள தொய்வை உணர்த்துகிறாரா? தொய்வை இவர் சரிகட்டக் கூடாதா? தொய்விற்குத் தாமும் கரணியம் என ஒப்புக்கொள்கிறார்! உண்மையை ஒப்புக்கொள்வது மட்டும் போதாது. செய்யத் தவறிய கடமையைச் செய்து காட்டவேண்டும். பிறநாட்டு விடுதலையியக்கங்களைப் பற்றித் தொகுத்து விடுக்க வேண்டாமென்று தடுத்தவர் எவர்? எல்லாவற்றையும் அவர் ஒருவர்தாம் செய்ய வேண்டுமா? இவையனைத்தும் அவருடனிருப்பவர்களும் இருந்தவர்களும் நன்கு அறிவர்.

'தென்மொழி' ஓர் இதழன்று. அஃதோர் இயக்கம். வினை வல்ல தொண்டர்களை உருவாக்க வேண்டும். மூவாயிரமாண்டுகளாக அடிமைப்பட்டுத் தான் ஒரு தமிழன் என்பதையே மறந்திருக்கும் தமிழனைத் தட்டி யெழுப்பும் போர் முரசு. தமிழர்களின் பொதுச் சொத்து. போற்றுவதும் புரப்பதும் இன்றைய தமிழிளைஞர் கடன்.

—அன்பன், **ந. முத்துக்குமரன்**, பல்லடம்.

*0:791:* அருந்தமிழ் நலங்காக்கும் பெரும் பேராசிரிய, பணிவார்ந்த வணக்கம்; வாழ்க பல்லாண்டு. ஓரன்பர், 'நீங்கள் ஏமாறி வருகிறீர்கள்' எனத் தனிப்பெரும் பொறுப்புணர்வுடன் சிறப்பு மடலொன்று தீட்டித் தமது நற்றமிழ்ப் பற்றையும், நல்லுணர்வையுந் தெள்ளிதின்—தெரியக் காட்டியிருந்தார். நன்றே. நனி மகிழ்ந்தேன். எனினுஞ் சிறிதே இளைத்தேன்....இரும்பினும் வலிய உள்ளமும், இனியவே செய்யும் எண்ணமுங் கொண்ட திண்ணியராகிய தங்களிடம் மெலிவு எதுவுந் தெரியவில்லை. ஏதோவொரு மெலிவு தெரிவதாகச் சிறப்பு மடல் தீட்டியது எண்ணக் கோணலே; அஃதொரு மாயத்தோற்றமே **(Illusion)**. கறுப்புக் கண்ணாடியணிந்து காணின், காண்பனவெல்லாங் கறுப்பாகத் தெரிதல் போன்றே தங்களிடம் மெலிவு காண்பதாகக் கூறுவார் கூற்றும். அக் கூற்றைப் புறந்தள்ளுக...தங்களது அளப்பரும் அறிவாற்றலைக்

கண்டு வினைசெயல் வகையை அறிந்து, வியந்து, விருப்பார்ந்து அன்பர் பலருந் தரும் அடைமொழிகள் அனைத்தும்—அப்பழுக்கற்ற உண்மை. வெறும் புகழ்ச்சிச் சிண்டுகளல்ல அவற்றை வெட்டியெறியத் தேவையுமில்லை. சிலரிடத்து அவ்வப்போது காணப்படுஞ் சிறு சிறு குறைகள் சிற்றுணர்வு வயப்பட்டதே. முற்றுணர்வால் நேர்பவையல்ல. அத்தகைய புறம்போக்க வேண்டிய சிறு குறைகளையே பெரிதுபடுத்திக் குணங்காணலை விட்டுக் குற்றங்காண முற்படுதல் நன்றன்று. நூற்றுக்கு நூறு மொழிநலம் பேணும் அரும்பணியில் முனைந்து—முன்னின்று, தென்மொழி வழியே செல்பவர் போற்றற்குரியரே; என்றாலும் நூற்றுக்கு எண்பது விழுக்காடாகிலும் தென்மொழியின்பால் பற்றுமிக்குச் சற்றுந் தளர்ச்சியின்றித் தங்கள் கூறுந் தூய்தமிழ்த் நெறிகளை நடைமுறைப்படுத்த விருப்புடன் வினையாற்றுபவரும் வரவேற்புக்குரியவரே என்பதில் யாதும் ஐயப்பாடின்று...

தங்களது திண்ணிய எண்ணம், வெல்லரிய சொல்லாற்றல், செயற்கருஞ் செயல் ஆகியவற்றில் இதுகாறுந் தொய்வுஞ் சரிவும் ஏற்பட்டதில்லை. மாறாகப் புதிய மொய்ம்புஞ் செறிவுமே மிகுந்து வருகின்றது. சரிவு போல் தோற்றுவது தென்மொழியின் வளர்ச்சிப் போக்கில் பல்வேறு வினையழுத்தங்களாற் காணப்படுந் தேக்க நிலையேயாம். அவ்வக்கால நாட்டு நடப்புகளை நன்கறிந்து, இடம் பொருளுணர்ந்து படியாத் தமிழர்க்குத் திடம்பட மெய்யறிவுறுத்தி வருந் தங்களது தளரா வளர்திறத்தில் எஞ்ஞான்றுஞ் சரிவுந் தொய்வுந் தோன்றுதலில்லை களர்நிலத்தினும் விழுந்து, முளைத்துத் தூய்தமிழ்ப் பயன்றரவல்ல பொறுக்குவிதைகளனைய தங்களின் பொங்கு தமிழ்க் கருத்துரைகளைக் கேட்பவர் யாரும் எக்காலத்துந் தங்களை ஏமாற்றத் துணியார்; இயலவும் இயலாது. இஃதுறுதி. அடர்த்திமிக்க தங்களின் அசைக்கவியலாத் தனித்தமிழ்க் கொள்கையும், ஒரு பெருங்குறிக்கோள் நோக்கிய போக்கும், முத்தமிழ் நலங் கனியப் புத்தூழியைத் தோற்றுவித்துவர கொன்னே நிகழ்வுக்காலம் பற்றிக் கவலுறல் எற்றுக்கு?

கதிர் முதலாய புல்லிய தமிழ்கொல்லுந் தான்தோன்றி யிதழ்களைச் சிற்றுணர்வாலுந்தப்பட்டுப் படிப்பதால் என்னனையர்தம் தூய்தமிழறிவில் அவ்வப்போது படிந்துவிடும் வாளாமையகற்றும் அருந்தமிழ் மருந்து தென்மொழியே. இதனைத் தொடக்கமுதல் எழுத்தெண்ணிப் படித்து வந்த—வரும் என்னனையர்க்கும் தூய் தமிழுணர்வுகளை எடையிட்டுக் காட்டவல்லாராரோ? எளியேனின் உயிருக்கு நேராக, உணர்வுக்கு நீராக விளங்குந் தென்மொழிக்கு ஓர் ஊறு நேருமெனில் உறவும் ஊராரும், உற்றார் பெற்றோரும் விட்டு, உடனெழுந்து உந்தியுயர்த்தும் ஒண்டமிழ் காத்திட முந்தி நிற்பேன் வேட்டெஃகங் காட்டி விரட்டினும் வீறார்ந்து வெற்றி நற்றமிழ்க்கென விளம்புவேன்; முழங்குவேன்.

—பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை–600 005 (தமிழகம்)